REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 14 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :136 பங்குனி 28ஆம் நாள் வெள்ளிக்கிழமை 10 ஏப்ரல் 2020



## முல்லைவாசிகள் மூவருக்கும் கொரோனா இல்லை

யாழ்ப்பாணம், ஏப். 10

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 3 பேரிடம் நேற்று மேற்கொள்ளப்பட்ட சோதனையில் மூவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று இல்லை என்று அறிக்கை கிடைத்து ள்ளது. இந்தத் தகவலை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அரியாலையில் உள்ள தேவாலயத்தில் கடந்த மார்ச் 15ஆம் திகதி சுவிஸ் போதகர் தலைமையில் நடை

02

# மாவட்டம் தாண்டினால் 14 நாள்கள் தனிமை!

### பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.10

ஊரடங்கு நேரத்தில் மாவட்டங்களுக்கிடையில் பயணிக்கும் நபர்கள் 14 நாள்கள் தனிமைப்படுத்தவதற்காக, தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களுக்கு கட்டாயமாக அனுப்பப்படுவர் என பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஏப்ரல் 8 ஆம் திகதி காலை 6

02

## பொலிஸாருக்கு அதிகாரமில்லை!

### ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா சுட்டிக்காட்டு



கொழும்பு, ஏப்.10

தனிமைப்படுத்தல் என்பது சுகாதார நிலைமைகளுக்காக மருத்துவ காரணங்களுக்காக மேற்கொள்ளப்பட வேண்டும். ஊரடங்குச் சட்டத்தை மீறியமைக்காக 14 நாள்கள் தனிமைப்படுத்தும் அதிகாரம் பொலிஸாருக்

02

## தமிழ்ப் புத்தாண்டுக்கு முன்னர்

# யாழில் ஊரடங்கு தளர வாய்ப்பில்லை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 10

தமிழ் சிங்களப் புத்தாண்டுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் ஊடரங்குச் சட்டம் நீக்கப்படுவதற்கு வாய்ப்பில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் புதுவருடத்தின் பின்னரும், யாழ்ப்பாணக் குடாநாட்டின் சில பகுதிகளில் மாத்திரமே ஊரடங்குச் சட்டம் நீக்கப்படுவதை பாதுகாப்புத் தரப்பினர் விரும்புவ தாகவும் தெரியவருகின்றது.

02

### வடக்கு மாகாண பணியாளர்கள் உள்ளூராட்சி உறுப்பினர்களிடமிருந்து

## நிவாரண நிதி

யாழ்ப்பாணம், ஏப். 10

வடக்கு மாகாண சபைக்கு உட்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்கள் என்பவற்றின் கீழ் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களிலுள்ள மக்கள் பிரதிநிதிகள் ஆகியோரின் நிதிப் பங்களிப்புடன் நிவாரண நிதியைத் திரட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

02

## மன்னார் விபத்தில் சகோதரிகள் சாவு

### நேற்று ஊரடங்கு தளர்ந்தபோது பரிதாபம்





மன்னார், ஏப். 10

மன்னாரில் நேற்று ஊரடங்கு தளர்த்தப்பட்ட நேரம் இடம்பெற்ற கோர விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிகள் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

02

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திடீர் இடமாற்றல்

### கொரோனா தடுப்புச் செயற்பாடுகளுக்கு ஒத்துழைக்காமையால் நடவடிக்கை!

யாழ்ப்பாணம், ஏப். 10

யாழ்ப்பாண மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகக் கடமையாற்றிய ஏ. தேவநேசன் கொழும்பு சுகாதார அமைச்சினால் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனைக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ. கேதீஸ்வரன், மாகாணப்

02



## நேற்று ஐவர் நலம் ஒருவர் பாதிப்பு

கொழும்பு, ஏப். 10

கொரோனா பெருந்தொற்றுக்கு உட்பட்டிருந்த இலங்கையர்கள் ஐவர் நேற்று நலம்பெற்று வீடுகளுக்குத் திரும்பினர்.

இது தொடர்பில் சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான ஒருவர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று சுகாதார அமைச்சு அறிவித்

02



*முச்சந்தி முரளி*

"அப்ப இந்தமுறை யாழ்ப்பாணத்தில சித்திரை வருசமும் வீட்டுக்க தான் பிறக்கப் போகுது போல"

## வெளி மாகாணத்தவரை அனுப்புவதில் முடிவில்லை

யாழ்ப்பாணம், ஏப். 10

வடக்கு மாகாணத்தில் தங்கியுள்ள ஏனைய மாகாணங்களைச் சேர்ந்த 2 ஆயிரம் பேரையும் அவர்களின் சொந்த மாவட்டங்களுக்கு அனுப்புவது தொடர்பில் தேசிய ரீதியிலேயே இறுதி முடிவு எடுக்கப்பட வேண்டும். மாகாண ரீதியில் முடிவெடுக்க முடியாது என்று ஆளுநர் தலைமையில்

02

## இளம் பெண் சடலமாக மீட்பு

கொடிகாமம், ஏப். 10

தூக்கில் தொங்கிய நிலையில் இளம் பெண் ஒருவரின் சடலம் மீசாலை கிழக்கில் நேற்

02



செய்திகள் மற்றும் விளம்பரங்களை உதயனில் பிரசுரிக்க...

செய்தி
077 316 5555
076 584 2222
021 493 0000

விளம்பரம்
071 618 2182
077 959 2628
021 493 1111

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மாவட்டம்...

மணி முதல் 9 ஆம் திகதி காலை 6 மணி வரையான 24 மணிநேர காலப்பகுதிக்குள் ஊரடங்குச்சட்டத்தை மீறிய ஆயிரத்து 723 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையிலுள்ள மொத்தச் சனத்தொகையில் 95 வீதமானோர் ஊரடங்குச் சட்டத்தை மதித்து செயற்படுகின்றனர். எனினும், சிலர் சமூக பொறுப்பை மறந்து செயற்படுகின்றனர்.

குறிப்பாக அநுராதபுரம், பொலன்னறுவை, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் கூடுதல் கைதுகள் இடம்பெறுகின்றன. கைது செய்யப்பட்ட பின்னர், பொலிஸார் மற்றும் நீதிமன்றத்தின் ஊடாக பிணை வழங்கப்படுவதால் சிலர் நடைமுறையை மீறுகின்றனர்.

எனவே, ஊரடங்குச் சட்டத்தை மீறுபவர்களையும், ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் போது ஒரு மாவட்டத்தில் இருந்து இன்னொரு மாவட்டத்துக்குச் செல்வோரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள். ஏனெனில் அடுத்துவரும் நாள்கள் தீர்க்கமானவை. வைரஸைக் கட்டுப்படுத்துவதற்காக தீவிரமாகச் செயற்பட வேண்டியுள்ளது. என்றார். (க-44)

## முல்லை...

பெற்ற ஆராதனையில் பங்கேற்றவர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா என்று அவர்களது வீடுகளில் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களது மாதிரிகள் ஆய்வுகூடப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

இந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை முல்லைத்தீவைச் சேர்ந்த மூவரின் மாதிரிகள் பெறப்பட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அவர்கள் மூன்று பேருக்கும் கொரோனா வைரஸ் தொற்று இல்லை என்று அறிக்கை கிடைத்துள்ளது. (ஒ.5,20)

## யாழில்...

வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமை தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுக் காலை முக்கிய கலந்துரையாடல் இடம்பெற்றது.

தற்போது நீடிக்கப்பட்டு வரும் ஊரடங்குச் சட்டம் தொடர்பில் பாதுகாப்புத் தரப்பினரும், அதிகாரிகளும் கருத்துக்களை வெளியிட்டனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் தொடர் ஊரடங்கு காரணமாக ஏற்பட்டுள்ள நிலைமைகள் ஆராயப்பட்டன.

புதுவருடத்துக்கு முன்னர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஊரடங்கைத் தளர்த்த வேண்டாம் என்று சுகாதாரப் பகுதியினரும், பாதுகாப்புத் தரப்பினரும் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

புத்தாண்டின் பின்னரும் ஊரடங்கு தளர்த்தப்படும்போது ஒவ்வொரு பொலிஸ் பிரிவாக ஊரடங்கைத் தளர்த்தலாம் என்றும், 4 மணிநேரம் ஊரடங்கை நீக்கலாம் என்ற யோசனையும் பாதுகாப்புத் தரப்பினரால் முன்வைக்கப்பட்டது. 4 மணி நேரம் ஊரடங்கு நீக்கம் என்ற விடயம் அதிகாரிகளால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

மேலும், யாழ்ப்பாணக் குடாநாட்டில் வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி, தீவகம் ஆகியவற்றில் மாத்திரம் புத்தாண்டின் பின்னர் ஊரடங்கைத் தளர்த்துவதற்கு சுகாதார அதிகாரிகள், பாதுகாப்புத் தரப்பினர் ஒருமித்து இணக்கம் தெரிவித்தனர். ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும் அந்தப் பிரதேசத்துக்குள் மாத்திரமே நடமாட அனுமதி வழங்கப்படும் எனவும் இதன் போது குறிப்பிடப்பட்டுள்ளது.

தாவடி, அரியாலை, மானிப்பாயில் தனிமைப்படுத்தல் பிரதேசங்களின் நிலைமையைப் பொறுத்தே குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் ஊரடங்கைத் தளர்த்துவது தொடர்பான இறுதி முடிவை எடுக்க முடியும் என்று கூறப்பட்டுள்ளது. இதே போன்று மன்னார் தாராபுரத்தின் நிலைமையைப் பொறுத்தே அங்கு ஊரடங்கை நீக்குவது தொடர்பான முடிவை எடுக்கக் கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி, முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய், பாண்டியன்குளம், ஒட்டுசுட்டானின் ஒரு பகுதி, வவுனியா மாவட்டத்தின் நெடுங்கேணி, செட்டிக்குளம் ஆகிய பிரதேசங்களில் புதுவருடத்துடன் ஊரடங்கை நீக்க முடியும் என்றும் இதன் போது கூறப்பட்டுள்ளது. (ஒ.5,105)

## வெளிமாகாண...

நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் பிற மாவட்டங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் தங்கியுள்ளதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதே நேரம் கொழும்பு மாவட்டத்தில் 2 லட்சத்து 50 ஆயிரம் பேரும், கம்பஹா மாவட்டத்தில் 40 ஆயிரம் பேரும் உள்ளதாக வெளி மாவட்டத்தவர்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதேபோன்று ஏனைய மாவட்டங்களிலும் உள்ளனர்.

இதனால் தங்கியுள்ள மாவட்டத்தில் இருந்து சொந்த மாவட்டத்துக்கு அனுப்புவது என்ற விடயத்தில் தேசிய ரீதியிலேயே அதாவது ஜனாதிபதி செயலணியில் முடிவு எடுக்கப்பட வேண்டும் என்பதால், வடக்கு ஆளுநரின் நேற்றைய கலந்துரையாடலில் இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை. (ஒ.5,105)

## நிவாரண...

வடக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் வைப்பிலுள்ள நிதியை தற்போதைய இடரைக் களைவதற்குப் பயன்படுத்த வடக்கு மாகாண ஆளுநரிடம் அனுமதி கோரப்பட்டிருந்தது. அதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக நிவாரண நிதி திரட்டல் யோசனை முன்வைக்கப்பட்டு ள்ளது.

மாகாண நிர்வாகத்தில் பணியாற்றும் சகல நிறைவேற்று அதிகாரிகளும் ஆயிரத்து 500 ரூபாவும், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் ஆயிரம் ரூபாவும், சிற்றூழியர்கள் 500 ரூபாவுமாக நிதிப் பங்களிப்புச் செய்யவேண்டும். அதேபோன்று மாகாண நிர்வாகத்துக்கு உட்பட்ட ஆசிரியர்களும் நிதிப் பங்களிப்புச் செய்ய வேண்டும். இதனைவிட வடக்கு மாகாணத்திலுள்ள 2 ஆயிரத்து 224 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் நிதிப் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்ற எல்லைப் பரப்புக்கள் திரட்டப்படும் நிதி அந்தந்த உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக, பிரதேச செயலகங்கள் வழங்கும் பட்டியலுக்கு நிவாரணம் வழங்க பயன்படுத்தப்படும். நிவாரணங்களை பொருளாகவோ அல்லது நிதியாகவோ வழங்குவது தொடர்பில் அந்தந்த மாவட்டச் செயலர்களுடன் கலந்துரையாடல் நடத்தி இறுதி செய்யப்படும்.

உள்ளூராட்சிசபைகளின் நிதியை இடர்நிவாரணத்துக்கு வழங்க அனுமதிப்பதில்லை என்று ஆளுநர் முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.5,105)

## நேற்று...

துள்ளது. இதையடுத்து தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 189 இலிருந்து 190ஆக அதிகரித்துள்ளது.

அதேவேளை, தொற்றுக்குள்ளாகி மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவந்த மேலும் 5 பேர் நேற்றுக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். அதற்கமைய, குணமடைந்தவர்களின் எண்ணிக்கை, 44 இலிருந்து 49ஆக உயர்வடைந்துள்ளது.

கொரோனாவின் தாக்கத்தால் இதுவரை 7 பேர் உயிரிழந்துள்ள நிலையில், ஏனைய 134 நோயாளிகளும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதனிடையே வைத்தியசாலைகளில் மேலும் 242 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர் என்றுள்ளது. (ம-22)

## இளம் பெண்...

று பிற்பகல் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதே இடத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் சிந்துஜா (வயது-21) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். அவர் தூக்கிட்டு தற்கொலை செய்தமைக்கான காரணம் தெரியவில்லை. அது தொடர்பாக விசாரணை நடைபெறுகின்றது எனச் சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர். சடலம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (த-159)

## பிராந்திய...

பணிக்கு மேலதிகமாக யாழ்ப்பாண மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணியையும் ஆற்றுவார். அதேவேளை மருத்துவர் குமாரவேல், யாழ்ப்பாண மாவட்ட பதில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகக் கடமையாற்றுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் சட்டம் நடைமுறையில் உள்ள காலத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அனுமதியுடனே அவசியமான இடமாற்றங்களை மேற்கொள்ள முடியும். இருப்பினும் இந்த இடமாற்றத்துக்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் அனுமதி இதுவரையில் பெறப்படவில்லை.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் முன்னெ டுக்கப்பட்டு வரும் நிலையில் இந்த இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கொரோனா தடுப்பு நடவடிக்கைக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்று கொழும்பு சுகாதார அமைச்சுக்கு மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாகவே இந்த இடமாற்றம் திடீரென மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, கொழும்பு சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (ஒ.5,105)

## மன்னார்...

மோட்டார் சைக்கிளும் கெப் ரக வாகனமும் மோதுண்டதாலேயே இந்த விபத்து இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் பரப்பான்கண்டல் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த மன்னார் மழுவராயர் கட்டையடம்பன் பகுதியில் வசிக்கும் சந்தியோகுலிண்டா (வயது- 40), சந்தியோகு டெரன்சி (வயது -25) ஆகியோரே உயிரிழந்தனர். லிண்டா மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் கடமையாற்றுகின்றார். டெரன்சி மன்னார் அஞ்சல் அலுவலகத்தில் கடமையாற்றுகின்றார்.

குறித்த இரு சகோதரிகளினதும் மூன்றாவது சகோதரி மருத்துவமனையில் குழந்தை பிரசவித்திருந்தார். அவரை பார்த்துவிட்டு வீட்டுக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்து கொண்டு அவர்கள் திரும்பியபோதே விபத்து இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஊரடங்குச் சட்டம் மன்னார் உட்பட 19 மாவட்டங்களில் நேற்றுத் தளர்த்தப்பட்டிருந்தது. இந்த நிலையில் பொருள்கள் கொள்வனவு உட்பட பல தேவைகளுக்காகவும் மக்கள் வீதிக்கு இறங்கியிருந்த நிலையில் விபத்து இடம்பெற்றது.

விபத்துடன் தொடர்புடைய கெப் ரக வாகனம் தனியார் நிறுவனத்துக்குச் சொந்தமானது என்று பொலிஸார் தெரிவித்தனர். கெப் ரக வாகனத்தின் சாரதி முருங்கன் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

சடலங்கள் விசாரணைக்காக மன்னார் பொது மருத்துவமனை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

விபத்து பற்றிய விசாரணைகளை உயிலங்குளம் மற்றும் மன்னார் பொலிஸார் மேற்கொ ண்டு வருகின்றனர். (த-105,213,56)

## பொலிஸாருக்கு...

குக் கிடையாது என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா.

ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள காலப் பகுதியில் ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்துக்குச் செல்வோர் கட்டாயமாக 14 நாள்கள் தனிமைப்படுத்தல் மையங்களுக்கு அனுப்படுவார்கள் என்று பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்திருந்தார். அது தொடர்பில் ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் ஊரடங்குச் சட்டமானது, சட்ட வலு உள்ளதா என்ற விவாதம் உள்ள நிலையில் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள காலப் பகுதியில் மாவட்ட எல்லைகளைக் கடப்போர் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்படுவர் என்று பொலிஸார் அறிவித்திருப்பது சட்டத்துக்குப் புறம்பானது.

ஊரடங்குச் சட்டத்தை மீறி நடப்பவர்கள் மீது பொலிஸார் வன்முறையைப் பிரயோகித்து வரும் நிலையில், படைத் தரப்பு தனக்கு இல்லாத அதிகாரங்களைப் பயன்படுத்துகின்றதா என்ற கேள்வி எழுகின்றது.

மறுபுறத்தில் கொரோனா வைரஸ் உலகளாவிய ரீதியில் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ள நிலையில் ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல் அனைத்து நாடுகளிலும் அவசியமாகக் கருதப்படுகின்றது. இலங்கைப் படைத்தரப்பு மேற்கொண்டுள்ள கொரோனா தொற்றுத் தடுப்பு நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை. அதற்காக அரசமைப்பை மீறுவது என்பது சட்டத்தின் ஆட்சிக்கும், ஜனநாயகப் பண்புகளுக்கும் எதிரானது என்பதை அரசு புரிந்து கொண்டு பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றைக் கூட்டுமாறு கோரியுள்ளபோதும், அரசு அதைக் கருத்தில் கொள்ளாதுள்ளது. இந்தச் சூழ் நிலையில் படைத்தரப்பு இல்லாத சட்டங்களைத் தான்தோன்றித் தனமாகப் பயன்படுத்துவது நாட்டின் எதிர்காலத்துக்குப் பொருத்தமானதல்ல. என்றார். (எ)

# சர்வகட்சிக் கூட்டமென்பது கண்துடைப்பு நாடகம்தான்

## அரசியல் இலாபம் தேடுவதற்கு அரசு திட்டம் என்கிறார் ஹக்கீம்

கொழும்பு, ஏப். 10

பிரதமர் தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டமென்பது ஊடகப் பரப்புரைக்காக நடத்தப்பட்டது என்பது தற்போது தெரியவருகின்றது. அதேபோல் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழ்நிலையைப் பயன்படுத்தி அரசியல் இலாபம் தேடுவதற்கு அரசாங்கம் முற்படுகின்றது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கொரோனா விவகாரம் உட்பட சமகால நிலைவரம் தொடர்பில் முகநூல் வாயிலாக நேற்று இடம்பெற்ற நேரலையில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'மேல் மட்டம் முதல் கீழ்மட்டம்வரை சமமாக விடயங்கள் சென்றடையக்கூடிய வகையில் அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளத்தக்க பொறிமுறை இன்னும் உருவாக்கப்படவில்லை. அனைத்து தரப்புகளையும் உள்ளடக்கிய வகையில் அந்த பொறிமுறை உருவாக்கப்படவேண்டும் என்ற ஜே.வி.பி உறுப்பினரின் கருத்தை ஏற்கின்றேன். இதற்கு மாற்றீடாக அரசாங்கத்தால் பிரதமர் தலைமையில் இரு தடவைகள் கட்சித் தலைவர்கள் கூட்டங்கள் நடத்தப்பட்டன. அவை ஊடக கண்காட்சிக்காக, பிரசாரத்துக்காக நடத்தப்பட்டவை என்பது புலனாகின்றது. எம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதுடன், மக்களின் முறைப்பாடுகளுக்கும் தீர்வுகள் உரிய வகையில் முன்வைக்கப்படவில்லை. அக்குரணையும், அட்டுலுகமவும் முற்றாக முடக்கப்பட்டுள்ளன. அங்கு வாழும் மக்களுக்கு அரசாங்கத்தின் நிவாரணங்கள் உரிய வகையில் சென்றடையவில்லை. அப்பகுதியில் எவ்வித பொறிமுறையும் இல்லை என்றே கூறவேண்டும். அத்துடன், தனி நபர்களின் நடத்தையை வைத்துக்கொண்டு ஒட்டுமொத்த சமூகத்தையும் குறைகூறும் விசமத்தனமான பரப்புரைகள் முன்வைக்கப்பட்டுவருகின்றன. இவற்றுக்கு சில ஊடகங்களும் துணைபோகின்றன'- என்றார். (ம-44)

# கொரோனாவை அரசியலாக்கினால் ஈரானின் நிலையே இலங்கைக்கும்!

## நவீன் மிரட்டல்



**கொழும்பு, ஏப். 10**

**அரசாங்கத்தின் நிவாரண செயற்திட்டம் கிராம மட்டத்தில் உள்ள அரசியல்வாதிகளால், அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:

'கொரோனா வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. அவற்றை நாம் வரவேற்கின்றோம். 1948ஆம் ஆண்டில் இருந்து சுகாதாரத்துறைக்கு அதிக முதலீடுகளை செய்யும் நாடு என்ற வகையில் அதன் பிரதிபலனை இன்று அனுபவிக்கின்றோம்.

அதேபோல் அரசாங்கத்தால் வழங்கப்படும் நிவாரணத்திட்டத்தில் குறைபாடுகள் இருக்கின்றன. கிராமிய மட்டத்தில் உள்ள அரசியல்வாதிகள், கட்சி சார்பாகச் செயற்படுகின்றனர். ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர் என்று முறைப்பாடுகள் கிடைக்கின்றன. தேர்தலொன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் இவ்வாறு அரசியல் இலாபம் தேடும் நோக்கில் செயற்பாடுகள் இடம்பெறக்கூடாது. அரச நிவாரணம் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளமை கவலையளிக்கின்றது.

பெரும்பாலானவர்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று அரசாங்கம் கூறினாலும், இற்றைவரை சொற்ப அளவானவர்களுக்கே சென்றடைந்துள்ளது. எனவே, இன, மத குல பேதங்களுக்கு அப்பால் உரிய வகையில் நிவாரணம் வழங்கப்படவேண்டும். ஈரானில் பெப்ரவரி 23 இல் தேர்தல் நடைபெற்றது. அங்குள்ள தலைவர்கள் சிலர் கொரோனாவை அரசியலாக்கினர். இதனால்தான் அங்கு இப்போது மரணமானோரின் எண்ணிக்கை 4 ஆயிரத்தை நெருங்கியுள்ளது. எனவே, கொரோனாவை அரசியலாக்காமல், உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (ம-44)

# யானை தாக்கி விவசாயி படுகாயம்

மட்டக்களப்பு, ஏப்.10

போரதீவுப்பற்றுப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட 35 ஆம் கிராமம் கண்ணபுரம் கிராமத்தில் யானை தாக்கி, விவசாயி ஒருவர் படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று நடைபெற்றது. படுகாயமடைந்த நபர், களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விவசாய நடவடிக்கையின் நிமித்தம், அவரது வயலுக்குச் சென்ற வேளையே யானை தாக்கியுள்ளது. யானை தாக்குவதனை அறிந்த அயலவர்கள் குறித்த நபரை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-46)

# முடக்கப்பட்டது அக்கரைப்பற்று

கொழும்பு, ஏப்.10

கொரோனா வைரஸ் தொற்று அச்சத்தால் நாட்டின் சில பகுதிகள் தொடர்ந்தும் முடக்கப்பட்டுள்ளன. அம்பாறை - அக்கரைப்பற்று 19 ஆம் பிரிவுக்குட்பட்ட பகுதி நேற்று முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றுக்குள்ளான ஒருவர் அந்தப் பகுதியில் அடையாளம் காணப்பட்டதை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளானவர் அண்மையில் மரணச் சடங்கில் பங்குபற்றியிருந்தமையால், அக்கரைப்பற்று 19 ஆம் பிரிவுக் குட்பட்ட 320 குடும்பங்களைச் சேர்ந்தவர்களை சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, மன்னார் - தாராபுரம் பகுதியில் உள்ள சில குடும்பங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் - தாவடி கிராமமும் முடக்கப்பட்டு இன்றுடன் 17 நாள்களாகின்றன. தாவடி கிராம பிரிவில் மார்ச் 24 ஆம் திகதி கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர் அடையாளம் காணப்பட்டிருந்தார். அதையடுத்து சுமார் 350 குடும்பங்கள் வசித்துவரும் அந்தப் பகுதி முடக்கப்பட்டுள்ளது. (எ-22)

# அம்புலன்ஸ் சேவையை பெறுவதில் சிக்கலா?



**021 222 6666    021 221 7982**

**இந்த இலக்கங்களுக்கு அழையுங்கள்**

யாழ்ப்பாணம், ஏப். 10

1990 அம்புலன்ஸ் சேவையைப் பெற்றுக் கொள்வதில் தடங்கல்கள், தாமதங்கள் இருந்தால் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் 24 மணி நேர அவசர அழைப்பு எண்களான 021 222 6666 அல்லது 021 221 7982 என்ற இலக்கங்களைத் தொடர்பு கொள்ளுமாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார் .

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் தற்போதைய காலகட்டத்தில் இருதய நோய், நீரிழிவு, சிறுநீரக நோய் நிலைகள் மற்றும் ஆஸ்மா போன்ற சுவாசத் தொகுதி நோய் உடையவர்கள் இந்த நோய் நிலைமைகள்; தீவிரமடைந்து அவசர மருத்துவ சிகிச்சை தேவைப்படுகின்ற போதும் உரிய நேரத்தில் மருத்துவமனைகளுக்கு வருகைதராதிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நோயாளர்கள் மருத்துவமனைக்குச் செல்வதற்கு அம்புலன்ஸ் சேவையைப் பெற்றுக்கொள்வதில் சில தாமதங்கள் ஏற்பட்டதையும் அறிய முடிகின்றது. இதனால் கடந்த சில நாள்களில் துரதிஷ்டவசமாக சில தவிர்த்திருக்கப்படக்கூடிய இறப்புகளும் ஏற்பட்டுள்ளன.

மேற்படி தொற்றா நோயுடைய நோயாளர்கள் தமது நோய்நிலை தீவிரமடைகின்ற சந்தர்ப்பங்களில் உடனடியாக 1990 என்கின்ற அவசர அம்புலன்ஸ் இலக்கத்தை தொடர்பு கொண்டு மருத்துவமனைக்குச் செல்லவும். இந்தச் சேவையை பெற்றுக் கொள்வதில் ஏதாவது தடங்கல்கள் அல்லது தாமதங்கள் இருப்பின் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் 24 மணிநேர அவசர அழைப்பு எண்களான 021 222 6666, 021 221 7982 உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். அவர்களுக்கான அவசர அம்புலன்ஸ் சேவை எம்மால் ஒழுங்குசெய்யப்படும், என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ,5,20)

# ஈஸ்டர் ஆராதனைகள் பேராயர் இல்லத்தில்

**கொழும்பு, ஏப் 10**

**இந்த வருடத்துக்கான ஈஸ்டர் பெருநாள் ஆராதனைகள் கொழும்பு பேராயர் இல்லத்தில் நடைபெறவுள்ளது.**

பேராயர் இல்லத்தினால் இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில்,
கொரோனா வைரஸ் தாக்கத்தின் விளைவாக, கத்தோலிக்க ஆலயங்களில் இடம்பெறவிருந்த உயிர்த்த ஞாயிறு மற்றும் பெரிய வெள்ளி ஆராதனைகள் தடைசெய்யப்படுகின்றது. எனினும், பேராயர் இல்லத்தில் இருந்து நேரடி ஆராதனை நிகழ்வுகள் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகும்.
அந்த வகையில், இன்று பெரிய வெள்ளி வழிபாடுகள் பிற்பகல் 3 மணிக்கு நேரடி ஒலிபரப்பு செய்யப்படுவதுடன், நாளை சனிக்கிழமையன்று பாஸ்கா திருவிழிப்பு இரவு 10 மணிக்கு ஒளிபரப்பாகும்.
உயிர்த்த ஞாயிறு திருப்பலி காலை 7 மணிக்கு பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் பேராயர் இல்லத்தில் இருந்து நேரடி ஒளிபரப்பாகும். இந்த நிகழ்வுகளுக்கு நாட்டின் சகல பாகங்களிலும் உள்ள பேராயர்கள் அனைவரும் கலந்து கொள்ளவுள்ளனர்.
எனினும் பொதுமக்கள் எவரும் கலந்துகொள்ள அனுமதி இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது முதல் முதலில் உயிர்த்த ஞாயிறு வழிபாடு நிகழ்வுகள் தடைசெய்யப்பட்டிருந்தன. அதன் பின்னர் இலங்கையில் கடந்த 1971 ஆம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணியின் ஆயுதக் கிளர்ச்சி காலத்தில் உயிர்த்த ஞாயிறு வழிபாடுகள் அனைத்தையும் அரசு தடை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அதன் பின்னர் இம்முறையே கொரோனா வைரஸ் தொற்று காரணமாக மக்களின் நலன்களை கருத்தில் கொண்டு இவ்வாறான ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ந)





# கொரோனா சிகிச்சைக்கு இனி 'மெடி மேட் ரோபோ'

யாழ்ப்பாணம், ஏப்.10
கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்கும், பரிசோதிப்பதற்கும் 'மெடி மேட்' என்ற தொலை கட்டுப்பாட்டு 'ரோபோ 'சாதனமொன்று தற்போது உருவாக்கப்பட்டுள்ளது. கடற்படையின் ஆதரவின் கீழ் உருவாக்கப்பட்ட இந்தத் தானியங்கிச் சாதனம் நெவில் பெர்னாண்டோ போதனா மருத்துவமனையின் பயன்பாட்டுக்காக நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டது.




நாடு முழுவதும் பரவி வரும் கொரோனா வைரஸை எதிர்த்து கடற்படை பல திட்டங்களைத் தொடங்கியுள்ளது. கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியால் டி சில்வாவின் வழிகாட்டுதலின் கீழ், வருங்கால கண்டுபிடிப்பாளர்களுக்கு புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தி, அவர்களின் புதுமையான கருத்துக்களை வெளிப்படுத்த கடற்படையின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பிரிவு மூலம் தேவையான வசதிகள் வழங்கப்படுகிறது. அதன் படி மருத்துவர்கள் நோயாளிகளிடம் செல்லாமல் அவர்களின் அறிகுறிகளைக் கண்டறியக்கூடிய, தொலை கட்டுப்பாட்டால் செயற்படும் வகையில், 'மெடிமேட்' என்ற தானியங்கிச் சாதனமொன்று உருவாக்கப்பட்டது.
இந்தச் சாதனத்தின் மூலம் நோயாளிகளிடம் செல்லாமல் மருத்துவர்கள் அவர்களுடைய அறிகுறிகளைக் கண்டறிய முடியும். அத்துடன் நோயாளிகளுடன் பேசவும், நோயாளிகளுக்கு மருந்துகளை வழங்கவும், உணவு மற்றும் பானங்கள் உள்ளிட்ட அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் இந்த ரோபோ உதவும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ப-7)

உலகத் தமிழ் பண்பாட்டு மையத்தின்

# வடக்கில் நலிவுற்றோரை நோக்கிய உதவித் திட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.10
கொவிட் 19 ஊரடங்கு உத்தரவால் நலிவுற்ற பிரதேசங்களில் மிகவும் வறுமையில் வாடும் குடும்பங்களுக்கு யாழ்ப்பாணத்தை தலைமையகமாகக் கொண்டு செயற்படும் உலகத் தமிழ் பண்பாட்டு மையம் நேற்றுமுன்தினம் முதல் யாழ்ப்பாண மாவட்ட மட்டத்தில் உதவித் திட்டங்களை முன்னெடுத்துள்ளது.
உலகத் தமிழ் பண்பாட்டு மையத்தின் ஸ்தாபகத் தலைவர் மாவை சோ. தங்கராஜா மற்றும் கனடா நாட்டின் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் சட்டத்தரணி அ.இளஞ்செழியன் ஆகியோரின் நேரடியான நிதிப்பங்களிப்பில் பெறுமதி மிக்க உலர் உணவுப் பொதிகள் நலிவுற்றோரை நோக்கி வழங்கப்பட்டது.
வலி. வடக்குப் பிரதேச செயலாளர் வழங்கிய பட்டியலுக்கு அமைய முதற்கட்டமாக ஜே/232 மாவிட்டபுரம் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ப-50)

# முன்மாதிரியான 'திருமணப் பரிசு'!

யாழ்ப்பாணம், ஏப்.10
யாழ்ப்பாணத்தில் நேற்று திருமண பந்தத்தில் இணைந்த கஜேந்திரன் அனுஷா தம்பதியினர், தமது திருமண நிகழ்வுக்கு ஒதுக்கப்பட்ட ஒரு தொகை நிதியை, ஊரடங்குச் சட்டத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்குமாறு, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ரோஸ்ட் மாஸ்ரர் கழகத்தினிடம் ஒப்படைத்தனர்.
இந்தத் தம்பதியரின் முன்மாதிரியான 'திருமணப் பரிசை' பலரும் பாராட்டி வருகின்றனர். (க)



# கொழும்பிலுள்ள வெளிமாவட்டத்தாரை 20ஆம் திகதிவரை அனுப்ப முடியாதாம்

கொழும்பு, ஏப். 10
தொடர் ஊரடங்குச் சட்டத்தால் கொழும்பில் சிக்கியுள்ள வெளிமாவட்ட மக்களை இம்மாதம் 20ஆம் திகதிவரை, அவரவரின் சொந்த ஊர்களுக்கு அனுப்புவதில்லை என்று அரசு தீர்மானித்துள்ளது என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் மேலும் கூறியுள்ளதாவது:
"சுகாதாரத்துறையின் கோரிக்கையின்படி மேல் மாகாணத்தில் தங்கியுள்ள வெளிமாவட்ட மக்களை எதிர்வரும் 20ஆம் திகதிவரை சொந்த ஊருக்கு அனுப்புவதில்லை என்று அரசு முடிவு எடுத்துள்ளது என கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் விஜயதாஸ ராஜபக்ஸ என்னிடம் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுடன் நாம் கலந்துரையாடவுள்ளோம். எது எப்படி இருந்தாலும், தமது சொந்த ஊர்களுக்குச் செல்லும் வரை கொழும்பில் சிக்கியுள்ள வெளிமாவட்டத்தவருக்கு, வாழுமிடங்களில் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தாம் உறுதியாக இருக்கின்றோம்" என்று குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் சனிக்கிழமை காலை, கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-22)

# 33 இலங்கையர்களை மீட்பதற்கு நடவடிக்கை

கொழும்பு,ஏப்.10
வெளிநாடுகளிலுள்ள விமான நிலையங்களில் சிக்கியுள்ள 33 இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.
அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். 33 பேரும் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டதன் பின்னர், தனிமைப்படுத்தப்படவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (க-22)

பருத்தித்துறை மருத்துவமனை அத்தியட்சகரை

# இடமாற்றாவிட்டால் பணிப்புறக்கணிப்பு

## மருத்துவர்கள் எச்சரிக்கை

**யாழ்ப்பாணம், ஏப். 10**

**எமது நியாயமான கோரிக்கைக்காகவும் மருத்துவமனையின் முன்னேற்றத்துக்காகவும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் அத்தியட்சகரை உடனடியாக இடமாற்றம் செய்யவேண்டும். தவறும் பட்சத்தில் பணிப்புறக்கணிப்புக்குச் செல்வதற்கான நிலைக்குத் தள்ளப்படுவோம். இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் நேற்று மாலை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் கொரோனா நோய்த்தொற்று காணப்படும் இக்கட்டான இந்தச் சூழ்நிலையில் மருத்துவமனையில் தொடர்ந்து தமது பணிகளை முன்னெடுப்பதில் உள்ள சிக்கல் நிலைகளை முன்வைத்து அவசர கடிதத்தை அனுப்பி வைத்துள்ளனர். நீண்ட காலமாக மருத்துவமனையில் காணப்படும் நிர்வாகம் தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் தற்போது உச்சமடைந்திருப்பதுடன் அனைத்து ஊழியர்களும் பாதுகாப்பான முறையிலும் ஒற்றுமையாகவும் கடமையாற்றுவதற்கு தற்போதைய நிர்வாகம் ஒத்துழைக்காத நிலையில் தற்போதைய மருத்துவ அத்தியட்சகர் மருத்துவர் த.குகதாசனை உடனடியாக மாற்றம் செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

முன்னதாக கொரோனா சந்தேகத்துடன் மருத்துவமனைக்கு வருகை தரும் நோயாளிகளை வகைப்படுத்தி சிகிச்சை முறைக்கு அனைத்து மருத்துவர்களும் முன்வந்திருந்த நிலையில் மருத்துவ அத்தியட்சகர் தடங்கல்களை ஏற்படுத்தியிருந்தார். இதனை அடுத்து நேற்றுமுன்தினம் மருத்துவமனைக்கு வருகை தந்த மாகாண சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன், அவசர கூட்டத்தைக் கூட்டியிருந்த போதிலும் அதில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு மருத்துவ அத்தியட்சகர் த. குகதாசன் ஒத்துழைக்க மறுத்ததுடன் அவமரியாதையாகவும் நடந்து கொண்டார்.

அனைத்து மருத்துவமனைகளிலும் ஊரடங்கு வேளையில் மருந்து விநியோகம் சுமுகமாக நடைபெற்று வருகையில் மந்திகை ஆதார மருத்துவமனையில் மாத்திரம் அத்தியட்சகர் அதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தார். இதனால் ஆயிரக்கணக்கான நோயாளர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர்.

கொரோனா என்று சந்தேகிக்கப்படும் நோயாளர்களைப் பார்வையிடும் மருத்துவர்களுக்கான பாதுகாப்பு அங்கிகள் வேறு மருத்துவமனைகளில் வழங்கப்பட்டிருந்த போதிலும் இங்கு கடமையாற்றும் மருத்துவர்களுக்கு அவை தேவையில்லை எனத் தெரிவித்திருந்தார். மேலும் கொரோனா சிகிச்சைக்கு என்று போதுமான நிதிவசதிகள் இருந்த போதிலும் இதற்கான தனியான விடுதி வசதிகளையோ உபகரணவசதிகளையோ ஏற்படுத்துவதற்கு தொடர்ச்சியாக இவர் மறுப்புத் தெரிவித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

அவசரகால நிலைமையான இந்தக் காலகட்டத்தில் கடமை நேரத்திலும் ஏனைய நேரங்களிலும் மருத்துவர்களாலும் ஏனைய உத்தியோகத்தர்களாலும் இவரைத் தொடர்பு கொள்ள முடியாமல் இருப்பதாக தொடர்ச்சியான குற்றச்சாட்டுக்கள் காணப்படுகின்றன, என்று அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஓ,5)

# வறுமையான நிலைக்குள் சிகை அலங்கரிப்பாளர்கள்

*உதவுமாறு மாவட்டச் செயலரிடம் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஏப்.10

யாழ்ப்பாண மாவட்டத்தில் சிகையலங்கரிப்பு தொழிலில் ஈடுபட்டு வந்த மூவாயிரத்து 200 க்கும் மேற்பட்ட சிகையலங்கரிப்பாளர்கள் ஊரடங்கு உத்தரவால் முற்றாகத் தொழில் இழந்துவறுமை நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளனர். எனவே இவர்களுக்கும் உதவிகளைச் செய்வதற்கு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் முன்வரவேண்டுமென்று நவாலி ஹேமலதா ஞாபகார்த்த நிதியத் தலைவர் செ.ரமேஸ் கேட்டுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் 8 கிளைகளைச் சேர்ந்த 3ஆயிரத்து 200 சிகையலங்கரிப்பாளர்கள் தொழில் இழந்து மிக வறுமையான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவர்களுக்கு யாழ். மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் ரூபா 10 ஆயிரம் பெறுமதியான உலர் உணவுகளை வழங்க முன்வர வேண்டும் என்று அவர் மேலும் கேட்டுக்கொண்டார். (ப-50)

# கொரோனா நிதியம் 585 மில்லியன் சேர்வு

கொழும்பு, ஏப். 10

கொவிட் 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு மீதி 585 மில்லியன் ரூபாவை நேற்றுக் கடந்துள்ளது. இலங்கை வங்கியின் நிறுவனக் கிளையின் 85737373 என்ற இலக்கத்தையுடைய கொவிட் 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்துக்கு உள்நாட்டு வெளிநாட்டு எந்தவொருவராலும் அன்பளிப்புகளை அல்லது நேரடி வைப்புகளை செய்ய முடியும். சட்டபூர்வமான கணக்கின் மூலம் நிதியத்திற்கு செய்யப்படும் அன்பளிப்புகள் வரி மற்றும் வெளிநாட்டு நாணய சட்ட திட்டங்களில் இருந்து விலக்களிக்கப்படும் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது. (ம)

# வெளி மாட்டத்துக்கு மரக்கறிகளை வழங்க விசேட ஏற்பாடு

வவுனியா,ஏப்.10

மரக்கறிச் செய்கையாளர்களின் நன்மை கருதி வவுனியாவிலிருந்து வெளி மாவட்டங்களுக்கு மரக்கறிகளைக் கொண்டு செல்லும் மொத்த வியாபாரிகளின் விவரங்கள் வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த வியாபாரிகளுடன் தொடர்புகொள்வதன் மூலம் வவுனியாவில் மரக்கறிச் செய்கையில் ஈடுபடுவர்கள் தமது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்யமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-110)

# கொரோனாவை ஒழிக்க வழிபாடு

மட்டக்களப்பு, ஏப்.10

உலகை தற்போது ஆக்கிரமித்துள்ள கொரோனா நோயிலிருந்து உலகத்தில் உள்ள அனைத்து மக்களையும் பாதுகாப்பதற்காகவும், இந்த நாட்டின் கொரோனாவை இல்லாமல் செய்வதற்கு பாடுபடும் ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்புத் துறையினர், சுகாதாரத் துறையினருக்கு தேகாரோக்கியம் கிடைக்க வேண்டும் என்றும் நேற்று விஷேட பிரார்த்தனை ஒன்று இடம்பெற்றுள்ளது.

கோளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் பாலைநகர் கிராமத்தில் அமைந்துள்ள இமாம் ஜஃபர் ஸாதிக் சமூக சேவைகள் நிறுவனத்தின் தலைமையகத்தில் அதன் தலைவர் அஷ்ஷெய்க் எல்.ரீ.எம்.ஹலீம் தலைமையில் இந்த விசேட பிரார்த்தனை இடம்பெற்றது. இதன்போது கோளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் பாலைநகர் கிராமத்தில் வாழும் இருநூற்றி ஐம்பது பேருக்கு உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன. (ப-150)



# அறிவுரையைப் பின்பற்றின் கொரோனாவை ஒழிக்கலாம்

*ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தனர் வைத்திய நிபுணர்கள்*

கொழும்பு, ஏப்.10

வைத்தியத்துறையினரின் அறிவுரைகளை அனைவரும் பின்பற்றினால் கொடிய நோயான கொரோனா வைரஸை இலங்கையிலிருந்து முற்றாக இல்லாதொழிக்கலாம் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் நேரில் தெரிவித்தனர் வைத்திய நிபுணர்கள்.

கொரோனா வைரஸ் நாட்டினுள் பரவுவதை உடனடியாக ஒழிப்பதற்கு, வைத்திய நிபுணர்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஜனாதிபதிக்கும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த வைத்திய நிபுணர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது. அதிலேயே அவர்கள் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளனர்.

தற்போது வைரஸ் தொற்றுடையவர்களுடன் நெருங்கிப் பழகிய குழுக்கள் அதற்கப்பாலும் இரு கட்டங்கள் முன்னோக்கி தொடர்புகளை கொண்டிருந்தவர்களை இனம்கண்டு பரிசோதிக்க வேண்டியதன் அவசியத்தை வைத்திய நிபுணர்கள் சுட்டிக்காட்டினர்.

வைரஸ் பரவாத பிரதேசங்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வைத்தியர்கள் வலியுறுத்தினர். அந்தப் பிரதேசங்களுக்கு வைரஸ் பரவியுள்ள பிரதேசங்களில் இருந்த செல்வதை நிறுத்த வேண்டும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அனைவரும் முடியுமானளவு வீடுகளில் இருப்பது முதலாவது நடவடிக்கை என்ற வகையில் மிகவும் முக்கியமானது எனவும் வைத்தியர்கள் சுட்டிக்காட்டினர். நீரிழிவு, சுவாசம் மற்றும் இருதயம் சம்பந்தமான நோய்கள் உள்ளவர்கள் மிகக் கவனமாக இருக்க வேண்டும் என்பதுடன், அவர்கள் உரிய மருந்துகளை உரிய முறையில் எடுக்க வேண்டும் என்றும் வைத்தியர்கள் குறிப்பிட்டனர். (எ-22)

# 4 பேர் கொண்ட குடும்பத்துக்கு 20 ஆயிரம் ரூபா வழங்கலாம்

## சஜித் யோசனை

கொழும்பு,ஏப்.10

நான்கு பேரை அங்கத்தவர்களாகக் கொண்ட குடும்பமொன்றுக்கு பட்டினிசாவு ஏற்படாமல் உணவுத் தேவையை மட்டும் பூர்த்தி செய்து கொள்வதற்கு, குறைந்தபட்சம் 20 ஆயிரம் ரூபா நிவாரணமாக வழங்கப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கொரோனா விவகாரம் உட்பட சம கால நிலைவரம் தொடர்பில் முகநூல் வாயிலாக இடம்பெற்ற நேரலையில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

“நாட்டில் நாளொன்றுக்கு 350 பீ.சி.ஆர். பரிசோதனைகளே இடம்பெறுகின்றன. அந்த எண்ணிக்கை 1500 வரை அதிகரிக்கப்படவேண்டும்.

அதேபோன்று கொரோனா வைரஸைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்குப் போராடும் சுகாதார மற்றும் பாதுகாப்பு துறையிலுள்ள அனைவருக்கும் தற்பாதுகாப்பு அங்கிகள் , கருவிகள் வழங்கப்பட வேண்டும்.

கொரோனா வைரஸ் கொடூரமானது. நியூயோர்க்கில் சிறுத்தை புலியொன்றுக்குக்கூட வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது. எனவே இது விலங்குகள்கூட மேலும் பரவக்கூடுமா என்பது பற்றியும் கவனம் செலுத்தப்பட வேண்டும். ஏனெனில் இந்த நோய் குறித்து போதுமான தகவல்கள் இல்லை. சொற்பளவையே நாமும் தெரிந்து வைத்துள்ளோம்.

அரசால் முன்னெடுக்கப்படும் நிவாரண வேலைத்திட்டம், அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அப்பால் முன்னெடுக்கப்பட வேண்டும். அனர்த்தமொன்று ஏற்படும் போது அரச பொறிமுறை எவ்வாறு செயற்பட வேண்டும் எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அரச அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் மீது நம்பிக்கை வைத்து நிவாரண பொறிமுறை அவர்கள் ஊடாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

வைரஸ் தாக்கத்தால் நாள்கூலிகள், மாதச் சம்பளம் பெறுபவர்கள், சுயதொழிலாளர்கள் என பல தரப்பினரும் கிராமங்களிலும், நகரங்களிலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு நிவாரணம் வழங்கும் போது புள்ளிவிபரத் திணைக்களத்தின் நிர்ணயங்களைப் பின்பற்றுவது சிறப்பாக இருக்கும். மனிதனுக்கு வாரத்துக்கு, மாதத்துக்கு வாழ்வதற்கு தேவையான விடயங்களைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான நிதி வழங்கப்பட வேண்டும்.

நான்கு பேரை அங்கத்தவர்களாகக் கொண்ட குடும்பமொன்று பட்டினிச் சாவு ஏற்படாமல், உணவுத் தேவைகளை மட்டும் பூர்த்தி செய்து கொள்வதற்கு 20 ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும்.

அதேபோன்று உணவு மட்டும் மருந்துத் தட்டுப்பாடுகள் ஏற்படாமல் இருப்பதற்கான வழிவகைகளையும் செய்ய வேண்டும். இனவாதம், மதவாதம் அடிப்படையில் செயற்படாமல் ஓர் தேசத்தினராக அனைவரும் இயங்க வேண்டும். மறுபுறத்தில் தேசிய பொருளாதாரத்தைப் பலப்படுத்த வேண்டும்- என்றார். (க-44)

# ஐயனார் வி.கழகத்தினரால் 260 குடும்பங்களுக்கு உதவி

யாழ்ப்பாணம்,ஏப்.10

வேலணை துறையூர் சமூக மட்ட அமைப்புக்கள், சமூக ஆர்வலர்கள், நலன்விரும்பிகளின் பங்களிப்புடன், வேலணை துறையூர்ஐயனார் விளையாட்டுக் கழகத்தினரால் 260 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன.

3 லட்சம் ரூபா பெறுமதியான அத்தியாவசியப் பொருள்களான அரிசி, மா, சீனி, பருப்பு, தேயிலை, சவர்க்காரம் என்பன இதன் போது மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படன. முதலாம் கட்ட நிவாரணப் பணிகளை ஐயனார் விளையாட்டு கழகத்தைச் சேர்ந்த இளைஞர்கள் மிகவும் சிறப்பாக நிறைவேற்றி, மேலும் பல சமூக ஆர்வலர்களின் பங்களிப்புடன், இரண்டாம் கட்ட நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மிகவும் துரிதமாக முன்னெடுத்து வருகின்றனர். (க)

# போதிய பொருள்களை எமக்கு வழங்கவில்லை!

## ப. நோ. கூ. சங்கத் தலைவர் குற்றச்சாட்டு

அளவெட்டி, ஏப் .10

“மாவட்டச் செயலர் கூறுவதைப் போல் எமக்கு பொருட்கள் அனுப்பி வைக்கப்படுவதில்லை. அவை அனுப்பி வைக்கப்படும் எனச் சொல்லப்பட்டபோதும், அவ்வாறான பொருட்கள் உரிய நேரத்தில் கிடைப்பதில்லை “எனத் தெரிவித்தார் அளவெட்டி பலநோக்கு கூட்டுறவுச்சங்கத் தலைவர் .

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாம் அரிசி உட்பட பல அத்தியாவசியப் பொருட்களை தனியாரிடம் இருந்து பெற்றே மக்களுக்கு விற்பனை செய்கின்றோம். கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்யக் கூடிய வகையில் எமக்கு மாவட்டச் செயலகத்தால் பொருட்கள் அனுப்பி வைக்கப்படுவதில்லை. அவ்வாறு 8 அனுப்பி வைப்பதாகக் கூறுகின்ற போதும், இதுவரை எமக்கு எந்த விதமான பொருட்களும் அனுப்பி வைக்கதில்லை. மக்கள் எம்மைக் குறைகூறுகின்றனர். எமக்கு மாவட்டச் செயலகம் தேவையான பொருட்களைத் வழங்கினால், அதனை நாங்கள் மக்களுக்குப் பகிர்ந்தளிக்கத் தயாராகவுள்ளோம் -“என்றார். (ந)

# பொருள்கள் வந்தும் வாங்கப் பணமில்லை

## மன்னார் மக்கள் கையறுநிலை

மன்னார், ஏப்.10

“எங்களின் கையில் பணம் இல்லாமல் அரசு எவ்வளவு உணவுப்பொருள்களைக் கொண்டு வந்தும் என்ன பலன்?” என்று மன்னாரைச் சேர்ந்த பொது மக்கள் கேள்வியை முப்பியுள்ளனர்.

கொரோனாத் தொற்றுக் காரணமாக நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப் பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்று 19 மாவட்டங்களில் தளர்த்தப்பட்டது. மன்னாரிலும் ஊரடங்கு தளர்த்தப்பட்டது. எனினும் வியாபார நிலையங்கள் வெறிச்சோடிக் காணப்பட்டன. இதற்கான காரணங்கள் என்னவென்று பொது மக்கள் சிலரிடம் கேட்ட போதே அவர்கள் மேற்படி கருத்தைக் கூறினர்.

”மக்கள் எவரிடமும் கையில் பணம் இல்லாததுதான் முதல் காரணம். கிட்டத்தட்ட இருபது நாள்களாக தொழில் வருமானங்கள் இல்லை . சிறுகச் சிறுகச் சேமித்து வைத்திருந்த பணத்தைக் கொண்டும், வட்டிக்குக் கடன் பெற்றும் ,நகைகளை அடகு வைத்தும் இந்த அவசர கால நிலையைச் சமாளித்து வந்தோம் .

ஆனால் இனியும் அப்படி வாழமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நிலைமை சாதகமாக உள்ள பகுதிகளை ஊரடங்கில் இருந்து விடுவித்து, அனைத்து மக்களும் தொழில் செய்து வருமானம் பெறக் கூடிய வழிகளை அரசாங்கம் செய்து தரவேண்டும். அப்பொழுதுதான் இனிவரும் நாள்களில் பல குடும்பங்களால் வாழ முடியும். மக்களின் கையில் பணம் இல்லாமல் அரசாங்கம் எவ்வளவு உணவுப் பொருள்களை கொண்டு வந்தும் பலன் இல்லை” என்று மக்கள் ஆதங்கத்தோடு கூறினர். (ப-213)



# தாரபுரத்துக்கு நடமாடும் சேவை

மன்னார்,ஏப்.10

மன்னார் தாராபுரம் கொரோனா தொற்று அச்சம் காரணமாக முடக்கப்பட்டுள்ளதால், அங்கு நடமாடும் விற்பனை சேவை நேற்று நடத்தப்பட்டது.

கிராமத்தில் உள்ளவர்கள் வெளியே செல்லவும், வெளியில் இருந்து தாராபுரம் கிராமத்துக்குச் செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதனையடுத்தே மன்னார் பிரதேச செயலகம்,சுகாதாரத் துறை அதிகாரிகள்,பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் நடமாடும் வியாபார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. (க-60,56)

# பிரச்சினைக்குத் தீர்வு காண நிபுணர்களுடன் பேசுங்கள்

## அரசுக்கு கரு ஜெயசூரிய ஆலோசனை

கொழும்பு, ஏப்.10

நாடு தற்போது எதிர் கொண்டிருக்கும் பிரச்சினைகளுக்கு நடைமுறைத் தீர்வுகளை அடைந்துகொள்வதற்கு அரசியல், பொருளாதார, விவசாய மற்றும் சமூகவியல் துறைசார் தரப்புக்களுடன் அரசு ஆக்கபூர்வமான கலந்துரையாடலில் ஈடுபட வேண்டும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து கரு ஜயசூரிய அவரது ருவிட்டர் பக்கத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

“மிகவும் நெருக்கடி மிக்க சூழ்நிலைகளில் ‘கலந்துரையாடல்’ என்பது வெற்றிக்கு மிகவும் அவசியமானதாகும். நாம் இப்போது பொருளாதார மற்றும் உணவுப்பொருட்களுக்கான நெருக்கடியைத் தவிர்க்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றோம். எனவே, தற்போதைய பிரச்சினைகளுக்கு நடைமுறைத் தீர்வுகளை அடைந்துகொள்வதற்கு அரசியல், பொருளாதார, விவசாய மற்றும் சமூகவியல் துறைசார் தரப்புக்களுடன் ஆக்கபூர்வமான கலந்துரையாடலில் அரசு ஈடுபடும் என்று எதிர்பார்க்கின்றேன்”-என்றார். (ப-22)

நிலாந்தன்

# தமிழ்க் கட்சி தலைவர்களுக்கு ஒரு பகிரங்கக் கடிதம்

ஒரு பொதுத் தேர்தலை நோக்கி நீங்கள் தயாராகிக் கொண்டிருந்த பொழுது அதற்கென்று காசு திரட்டி, சுவரொட்டி அடித்து, ஒட்டி, சின்னச் சின்னக் கூட்டங்களை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் உங்களுடைய தேர்தல் வியூகங்கள் எல்லாவற்றையும் 'கொவிட்19' குழப்பி விட்டது.

இதனால் உங்களுக்குப் புதிய செலவுகள் ஏற்பட்டன. பழைய நிகழ்ச்சி நிரலை மாற்ற வேண்டி வந்தது. எனினும் அதை நீங்கள் ஒரு நட்டமாக பார்க்கவில்லை என்றே தெரிகிறது. ஏனெனில் 'கொவிட்19' கொண்டு வந்திருக்கும் அனர்த்த நிலைமைகளைக் கையாண்டு நீங்கள் தேவைப்படும் மக்களுக்கு உதவிகளை வழங்கி வருகிறீர்கள். அதைப் படம்பிடித்து சமூக வலைத்தளங்களில் பரப்புகிறீர்கள். அதனால் அது நிவாரண அரசியல் என்று விமர்சிக்கப்படுகிறது. ஆனாலும் நீங்கள் நல்லது செய்கிறீர்கள். அதைப் பாராட்ட வேண்டும். அப்படி நிவாரணம் வழங்குவதன் மூலம் உங்களுடைய வாக்கு வங்கியை நீங்கள் பலப்படுத்தலாம். அது ஓர் அனர்த்த காலத்தில் தேங்கி நிற்கும் உங்களுடைய தேர்தலுக்கான நிகழ்ச்சி நிரலை வேறொரு வடிவத்தில் முன்னெடுக்க உதவக் கூடும்.

எனவே 'கொவிட்-19' உங்களுக்கு ஒருவிதத்தில் நன்மையும் தான். அதுமட்டுமல்ல மொத்த தமிழ் அரசியற் போக்கு என்று பார்க்கும் பொழுது அந்த வைரஸ் ஒரு பாரதூரமான சிதைவு அரசியலை சில மாதங்களுக்காவது ஒத்தி வைத்திருக்கிறது என்பதும் ஒரு நன்மைதான். கடந்த பத்தாண்டுகளில் முன்னைய தேர்தல்களோடு ஒப்பிடுகையில் தமிழ் வாக்குகள் அதிகம் சிதறக்கூடிய வாய்ப்புக்களை அதிகமாகக் கொண்ட ஒரு தேர்தலே இவ்வாறு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் அரசியற் பரப்பில் மூன்று தேசிய கட்சிகளும் அதற்கு மேற்பட்ட சுயேச்சைக் குழுக்களும் கூட்டு முன்னணிகளும் களத்தில் இறங்கும் ஒரு தேர்தல் களம் அது. யாழ்ப்பாணத்தில் மட்டும் மூன்றுக்கும் குறையாத சுயேச்சைக் குழுக்கள் குறிப்பாக சில சமூகங்களை மையப்படுத்தி போட்டியிட இருந்தன. வன்னியில் இரண்டு சுயேச்சைக் குழுக்கள் மதங்களை மையப்படுத்தி போட்டியிட இருந்தன. கிழக்கில் ஒரு கூட்டு முன்னணி பிரதேசத்தை முதன்மைப்படுத்தி போட்டியிடுகிறது. சுயேட்சைக் குழுக்களில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் போன்ற சிலவற்றைத் தவிர பெரும்பாலானவை மதங்களை சாதிகளை பிரதேசவாதத்தை முன்னிலைப்படுத்துவதால் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு எதிர்த்திசையிலேயே நிற்கின்றன.



இதனை எதிரியின் உற்பத்தி என்று சொல்லிவிட்டு இலகுவாக கடந்து போய்விட முடியாது. தமிழ் மக்களின் தேசியத் திரட்சியை சிதறடிக்க விரும்பும் தரப்புக்களால் இயக்கப்படும் அளவுக்கு தமிழ் மக்களில் சில பிரிவுகள் தேசிய நீரோட்டத்துக்கு வெளியே காணப்படுகின்றன என்ற உண்மையை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்களை தேசிய நீரோட்டத்தில் கரைத்துக் கொள்ள உங்களால் முடியவில்லை என்பதனையும் நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். சாதி ஏற்றத் தாழ்வுகள், மதப் பூசல்கள், பிரதேச வாதம் போன்ற தமிழ் மக்களின் தேசியத் திரட்சியை சிதறடிக்கும் அம்சங்களைக் குறித்து உங்களில் பலரிடம் ஒரு தேசியத் தரிசனம் இல்லை. நீங்கள் விட்ட இடைவெளிக்குள் தான் சாதிவாதிகளும் சமயவாதிகளும் பிரதேசவாதிகளும் ஆணாதிக்கவாதிகளும் உள்நுழைகிறார்கள்.

தாழ்த்தப்பட்ட சமூகங்களை முழுமையாக தேசிய நீரோட்டத்தில் கரைக்க உங்களில் பலரால் முடியவில்லை. இப்பொழுதும் தாழ்த்தப்பட்ட சமூகங்களின் வாக்குகளைப் பெற்று நட்சத்திர அந்தஸ்துடைய ஒரு பிரமுகரை வெல்ல வைப்பது எப்படி என்று தான் உங்களில் பலர் யோசிக்கிறார்கள். நட்சத்திர அந்தஸ்துள்ள ஒரு வேட்பாளரை வெல்ல வைப்பதற்காக சில சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வேட்பாளர்களை நீங்கள் தேடி எடுக்கிறீர்கள். மாறாக உங்களில் யாராவது அந்த வேட்பாளருக்கு வெற்றியை நிச்சயப்படுத்தி தேசியப்பட்டியல் ஆசனத்தை வழங்கத் தயாரா? இது தொடர்பில் மனந்திறந்து விவாதிக்க உங்களில் எத்தனை பேர் தயார்?

இப்படித்தான் சமயப் பூசல்களின் போதும் நீங்கள் கள்ள மௌனம் காக்கிறீர்கள். வெளிப்படையாகத் துணிச்சலாகக் கருத்துக் கூற உங்களில் எத்தனை பேர் தயார்? திருக்கேதீஸ்வரம் வளைவு விவகாரத்தை உங்களில் ஒருவராலும் வெற்றிகரமாகக் கையாள முடியவில்லை. அது நீதிமன்றத்துக்குப் போனதே உங்களுடைய தோல்விதான். அதன் விளைவுதான் இப்பொழுது இந்து மத குருமார்கள் ஒரு சுயேச்சையாக நிற்கிறார்கள். மற்றொரு சுயேச்சைக் குழு, சில கத்தோலிக்க மதகுருக்களின் பின் பலத்தோடு முன்னாள் விடுதலைப்புலிகள் இயக்கத்தவர்களை முன் வைத்துக் களமிறக்கப்பட்டுள்ளது.

திருக்கேதீஸ்வரம் வளைவு விவகாரம் மட்டுமல்ல 'கொவிட்19' இற்குப் பின்னரான சுவிஸ் போதகரின் விவகாரத்தையும் நீங்கள் சரியாகக் கையாளவில்லை. தீர்க்கதரிசனமாகக் கையாளவில்லை. அது உங்களுடைய பிரச்சினை அல்ல என்பது போல நீங்கள் மௌனமாக இருக்கிறீர்கள். சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆறு திருமுருகன் முன்வந்து ஓர் அறிக்கை விட்ட அளவுக்கு அரசியல் கட்சித் தலைவர்கள் யாரும் அதைப் பற்றிப் பேசவில்லை.

கொவிட்19 ஓர் உலகப் பெரும் தொற்றுநோயாக பிரகடனப்படுத்தப்பட்ட அன்று சுவிஸ் போதகர் யாழ்ப்பாணத்துக்கு வந்தார். சமூக ஒன்றுகூடல்களைத் தவிர்த்து தனியாள் இடைவெளிகளை அதிகரிப்பது பற்றி சமூக நிறுவனங்கள் சிந்திக்க வேண்டியிருந்த ஒரு காலகட்டத்தில் அவர் ஓர் ஆராதனையை நடத்தியது விபரீதமாக முடிந்து விட்டது. யாழ்ப்பாணத்துக்கான ஊரடங்குச் சட்டம் நீடிக்கப்படும் ஒவ்வொரு மணித்தியாலமும் சாதாரண யாழ்ப்பாணத்தவர்கள் அந்த போதகரைத்தான் ஒரு குற்றவாளியாகப் பார்க்கிறார்கள். அவர் வந்திருக்காவிட்டால் யாழ்ப்பாணத்துக்கு இப்படி ஒரு நெருக்கடி வந்திருக்காது என்று அவர்கள் நம்புகிறார்கள்.

சாதாரண ஜனங்கள் அப்படித்தான் சிந்திப்பார்கள். ஆனால் இந்த விவகாரத்தை ஆவிக்குரிய சபைகள் அனைத்துக்கும் எதிரான அவதூறுப் பிரசாரமாக ஒரு பகுதியினர் முன்னெடுத்து வருகிறார்கள். அவர்கள் மத்தியில் உங்களுடைய கட்சிக்காரர்கள் பலருண்டு. உங்களுடைய உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், தாயகத்திலும் புலம்பெயர்ந்த தரப்பிலும் உங்களுக்கு ஆதரவாக காணப்படும் சிலர் உங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நெருக்கமாக நின்று படம் எடுப்பவர்கள், இப்போதும் சில நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நிவாரணம் வழங்குபவர்கள் என்று பலரும் உண்டு. அவர்களுடைய முகநூல் பக்கங்களைப் பாருங்கள். ஆவிக்குரிய சபைகளைக் குற்றவாளிகளாகக் காட்டுகிறார்கள். குறிப்பாக அல்லேலூயா என்ற வார்த்தையை ஒரு தகாத வார்த்தையாகப் பயன்படுத்துகிறார்கள்.

சுவிஸ் போதகர் தனியாள் இடைவெளிகளைப் பேண வேண்டிய ஒரு காலகட்டத்தில் ஆராதனை நடத்தியது தவறு. ஆனால் அதை அவர் வேண்டுமென்று செய்ததாக கூறுவது தமிழ் மக்களின் புத்திக்கூர்மையை அவமதிப்பதாக அமைகின்றது. மட்டுமல்ல அப்படிக் கூறுவது தமிழ்த் தேசியத்தின் மதப்பல்வகைமைக்கு எதிரானது. அதைவிட முக்கியமாக தமிழ் தேசியத்திரட்சியை சிதைக்க உழைக்கும் சக்திகளின் பொறிக்குள் குருட்டுத்தனமாக விழுவது.

ஒரு போதகர் தன்னை அறியாமல் செய்த ஒரு தவறுக்காக எல்லா ஆவிக்குரிய சபைகளையும் அல்லேலுயா கூட்டம் என்று கூறி அவதூறு செய்வது என்பது இந்தியாவில் முஸ்லிம்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் அவதூறுக்கு எந்த வகையிலும் குறைவானது அல்ல. ஒரு நோயாளியை நாங்கள் குற்றவாளியாகக் காட்டுகிறோம். நோயை ஒரு குற்றமாகக் காட்டுகிறோம். அதை வைத்து மதமாற்றத்துக்கு எதிராகவும் ஆவேசமாகப் பேசுகிறோம்.

உங்களுக்குத் தெரியுந்தானே மதமாற்றத்தின் அடிப்படைகள் எங்கே இருக்கின்றன என்று? வறுமை, அறியாமை, சமூக ஏற்றத்தாழ்வு, போருக்கு பின்னரான உளவியல் போன்றவையே அதற்கு அடிப்படை. உலகம் முழுவதும் என்.ஜி.ஓ.க்களுக்கு பின்னாலும் புதிய மத அமைப்புகளுக்குப் பின்னாலும் உள்நோக்கமுடைய நிகழ்ச்சி நிரல்கள் இருக்கக்கூடும். ஆனால் அவ்வாறான மதம் மாற்றும் சபைகள் உங்களுடைய சமூகத்தில் இறங்கி வேலை செய்யக்கூடிய இடைவெளிகளை நீங்களும் நிரப்பவில்லை என்பதே உண்மை. எனவே முதல் தவறு உங்களுடையது.

இது விடயத்தில் உங்களுடைய கட்சிக்காரர்களை ஏன் நீங்கள் இதுவரையிலும் சரியாக வழிநடத்தவில்லை? அவர்களுடைய சமூக வலைத்தளப் பக்கங்களைச் சென்று பாருங்கள். அங்கு அவர்கள் என்ன எழுதிக் கொண்டிருக்கிறார்கள் என்று. அது தமிழ் தேசியத் திரட்சிக்கு எதிரானது என்பதனை அவர்களுக்கு நீங்கள் சுட்டிக்காட்டுவதில்லையா? அல்லது ஆவிக்குரிய சபைகளில் உங்களுக்கு வாக்காளர்கள் இல்லையா? அல்லது ஆவிக்குரிய சபை உட்பட கிறிஸ்தவ வாக்குகள் உங்களுக்கு தேவை இல்லையா? அப்படி என்றால் தனிச் சிங்கள வாக்குகளால் மட்டும் வெல்லலாம் என்று நம்பும் ராஜபக்சக்களுக்கும் உங்களுக்கும் இடையில் என்ன வேறுபாடு ? சிங்கள- பௌத்த தேசியவாதத்தைப் போலவே தமிழ்த் தேசியமும் ஒரு மதத் தேசியம்தான் என்று கூறப் போகிறீர்களா?

சிங்கப்பூரின் பிரதமர் நாட்டுக்கு உரையாற்றும் போது மலேசியாவில் நடந்த மத நிகழ்வில் பங்குபற்றியவர்களிடமிருந்தும் நோய் தொற்றியது என்பதை எப்படி ஒரு குறிப்பாக மட்டும் கூறிவிட்டுக் கடந்து போகிறார் என்று பாருங்கள். உங்களில் ஒருவருக்கும் அந்தத் துணிச்சல் இல்லையா? சுவிஸ் போதகரின் விவகாரம் ஒரு குறியீடு மட்டுமே. அதுபோல பல விடயங்கள் உண்டு.

(08ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்க் கட்சி தலைவர்களுக்கு....




(07ஆம் பக்க தொடர்ச்சி)

கூட்டமைப்பும் மாற்று அணியும் அதிகமதிகம் மையங் கொண்டிருப்பது வடக்கில்தான். மாற்று எனப்படுவது அதிகபட்சம் வடக்கு மையமாகவே காணப்படுகிறது. வடக்கு-கிழக்கு இணைந்த தாயகம் என்ற கோஷம் தேர்தல் கால சுலோகமாக மாறி வருகிறது. கிழக்கு மையத்திலிருந்து தாயகத்தைக் கட்டியெழுப்பும் பொருத்தமான அரசியல் தரிசனங்கள் எவையும் உங்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த வெற்றிடத்தில் தான் கிழக்கை மையப்படுத்தி குறிப்பாக வடக்கு முதன்மைக்கு எதிராகக் கூட்டுக்கள் உருவாக்கப்படுகின்றன. அதாவது தமிழ்த் தேசியத் திரட்சியைக் கட்டி எழுப்பும் விதத்தில் பொருத்தமான வேலைத்திட்டங்கள் உங்களிடம் குறைவு என்பதனால்தான் வடக்கையும் கிழக்கையும் பிரிக்கும் கட்சிகள் மேலெழுகின்றனவா?

இவ்வாறாக மதத்தை மையப்படுத்தி சாதியை மையப்படுத்தி பிரதேசவாதத்தை மையப்படுத்தி கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடும் ஒரு நிலைமை தீவிரமடைவது என்பது கடந்த பத்தாண்டுகளாக நீங்கள் தோல்வியுற்று வருவதைக் காட்டவில்லையா?

இவ்வாறு தமிழ் அரசியல் பரப்பில் நான்குக்கும் மேற்பட்ட கட்சிகளும் பல்வேறு சுயேச்சைக் குழுக்களும் போட்டியிட இருந்த ஒரு தேர்தல் களத்தை கொவிட்-19 ஒத்தி வைத்திருக்கிறது. அப்படிப் பார்த்தால் அது ஒரு நன்மையைச் செய்திருக்கிறது. கொவிட்19க்கு பின்னரான அரசியலில் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதனை நின்று நிதானமாகச் சிந்திப்பதற்கு உரிய ஒரு கால அவகாசத்தை அது உங்களுக்கு தந்திருக்கிறது. இந்த ஒத்திவைக்கப்பட்ட காலத்தை ஆழமாகச் சிந்திப்பதற்கும் தீர்க்கதரிசனமாக முடிவெடுப்பதற்கும் பயன்படுத்துகிறீர்களா? அல்லது தேர்தல் வெற்றியை மட்டும் இலக்காகக் கொண்டு நிவாரண அரசியலிலேயே உங்களுடைய முழுச் சக்தியையும் செலுத்துவீர்களா ? அங்கேயும் கூட ஒவ்வொரு கட்சியும் தன்பாட்டில் நிவாரணத்தை வழங்குகின்றது. அதற்கென்று ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு பொறிமுறை இல்லை. ஓர் அனர்த்த காலத்திலாவது நீங்கள் எல்லோரும் இணைந்து ஓர் ஒன்றிணைந்த பொறிமுறையைக் கண்டுபிடிப்பீர்களா? 'கொவிட்19' பூகோள அரசியல் போக்கில், பொருளாதாரத்தில் எதிர்பாராத இடைநிறுத்தத்தைச் செய்திருக்கிறது. ஒரு பூகோள நெருக்கடியை முன்வைத்து நீங்கள் குளோபலாகவும் லோக்கலாகவும் சிந்திப்பதற்கு அருமையான ஒரு தருணம் இது. கொவிட்19ற்குப்பின் பூகோள மயமாதலைக் குறித்தும் தேசியவாதத்தைக் குறித்தும் புதிய உரையாடல்கள் தொடங்கப் போகின்றன. இப்பொழுது புகையில்லாத வானம் நிர்மலமாக இருப்பது போல உங்களுடைய மனதையும் நிர்மலமாக மாற்றி ஆற அமர இருந்து ஆழமாக யோசியுங்கள்.

உலகம் முழுவதற்கும் ஒரு பொது ஆபத்தாக மேலெழுந்த கொவிட்19 தமிழ் மக்களுக்கும் ஒரு புதிய அனுபவம்தான். இத்தருணத்தில் நிவாரணம் கொடுப்பதற்கும் அப்பால் நீங்கள் என்ன செய்திருக்க வேண்டும்? சுனில் ரத்நாயக்க விடுவிக் கப்பட்ட பொழுது எல்லாக் கட்சிகளும் அதற்கு எதிராக அறிக்கை விட்டீர்கள். அதேசமயம் கொவிட் 19 கொண்டு வந்திருக்கும் புதிய சவால்களை எதிர்கொள்வதற்கு உங்களுடைய சமூகத்தை தயார்படுத்தும் நோக்கில் நம்பிக்கையூட்டி வழிகாட்டும் விதத்தில் உங்களில் எத்தனை பேர் இதுவரையிலும் பேசி இருக்கிறீர்கள்? பெருந்தமிழ்ப் பரப்பில் தாயகத்தை விடவும் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் கொவிட்19 அதிகம் உயிர்களை எடுத்திருக்கிறது.

உங்களில் எத்தனை பேர் டயஸ்பொறாவோடு கூட்டொருமைப்பாட்டைக் காட்டியுள்ளீர்கள்?

ஒரு புலம்பெயர்ந்த தமிழ் நண்பர் கேட்டார் தொழில் சார் மருத்துவர்களாக உள்ள சில அரசியல்வாதிகள் நிவாரணப் பொதிகளோடு படம் போடுகிறார்கள். இப்பொழுது ஏற்பட்டிருக்கும் ஆபத்தில் முன்னணிப் படையாக நிற்பவர்கள் மருத்துவர்களே. அரசியல்வாதிகளாக இருக்கும் தமிழ் மருத்துவர்கள் தமது தொழில் சார் உதவிகளை ஆஸ்பத்திரிகளுக்கு வழங்கலாமே என்று. ஓய்வு பெற்ற மருத்துவர்கள் சேவைக்குத் திரும்புமளவுக்கு இங்கு நோய்த்தொற்று தீவிரமாகவில்லைதான். அதேசமயம், அயர்லாந்தின் பிரதமரியோ வரட்கார் தற்காலிகமாக தனது மருத்துவத் தொழிலுக்கு திரும்பிச் சென்றுவிட்டார். இங்கிலாந்தில் அழகு ராணியாக வந்த பார்ஷா முகர்ஜீ தனது மருத்துவத் தொழிலுக்குத் திரும்பிச் சென்றிருக்கிறார். அரசியல்வாதிகளாக இருக்கும் தமிழ் மருத்துவர்களோ நிவாரணப் பொதிகளுடன் நிற்கிறார்கள்.

ஸ்பானியாவின் மாட்ரிட் நகரில் இருந்து ஒரு மருத்துவர் கூறினார் கொவிட்19 இற்கு முன்னே நாங்கள் நிர்வாணமாக நிற்கிறோம் என்று. ஆனால் இப்பொழுது மெய்யாகவே நிர்வாணமாக நிற்பது கடவுளின் முகவர்கள்தான் என்று எனது நண்பன் ஒருவன் கூறினான். அவ்வாறு கடவுளின் முகவர்கள் நிர்வாணமாக நிற்கும் ஒரு காலத்தில் மருத்துவர்கள் சமூகத்தின் பேச்சாளர்களாக மாறுகிறார்களா?

ஆம். மருத்துவர்கள் மட்டுமல்ல ஒவ்வொரு துறை சார்ந்தவர்களும் அவரவருக்குரிய கடமையைச் செய்ய வேண்டும். அரசியல்வாதிகள் இப்படிப்பட்ட நெருக்கடியான அசாதாரண சூழ்நிலையில் தமது மக்களுக்குத் தைரியத்தைக் கொடுக்க வேண்டும். அவர்களுடைய கூட்டு உளவியலைச் சோர விடாமல், சிதைய விடாமல் பாதுகாக்க வேண்டும். ஒரு உலகப் பொது நோயை எதிர்கொள்வதற்கு தேவையான சமூக நோய் எதிர்ப்புச்சக்தி என்பது சமூகத்தின் தன்னம்பிக்கையிலும் தங்கியிருக்கிறது.

ஒரு மக்கள் கூட்டத்தின் கூட்டு உளவியலைக் கட்டியெழுப்ப முதன்மையாக அரசியல் தலைவர்களாலும் ஆன்மீகத் தலைவர்களாலும்தான் முடியும். ஒரு உலகப் பெரும் தோற்று நோய்க்கு எதிராக சமூக நோய் எதிர்ப்புச் சக்தியை மருத்துவர்கள் மட்டும் கட்டியெழுப்ப முடியாது. அதற்கு ஆன்மீகத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், மருத்துவர்கள், சிவில் சமூகங்கள், கருத்துருவாக்கிகள், படைப்பாளிகள், ஊடகவியலாளர்கள் போன்ற எல்லாத் தரப்பினரும் கூட்டாக உழைக்க வேண்டும். அது ஒரு கூட்டுச் சிகிச்சையாக அமைய வேண்டும். தமிழ் கட்சித் தலைவர்களே அப்படி ஒரு கூட்டுப் பொறிமுறையை உருவாக்குவீர்களா? கொவிட்19இன் தாக்கம் குறையும் பொழுது உலகில் ஒரு தொகுதி தலைவர்கள் நிறுவப்பட்டிருப்பார்கள். ஒரு தொகுதி தலைவர்கள் கழித்து விடப்பட்டிருப்பார்கள். தமிழ்க் கட்சித் தலைவர்களே நீங்கள் இதில் எந்த வகைக்குள் அடங்கப் போகிறீர்கள்?




## கிளிநொச்சிப் பணிமனையில் கொரோனா விழிப்புணர்வு

கிளிநொச்சி, ஏப். 10

கிளிநொச்சி மாவட்ட இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கப் பணிமனையில் கொரோனா விழிப்புணர்வுச் செயலமர்வு நேற்று முன் தினம் நடைபெற்றது.

இதில் பிரதம பொதுச் சுகாதார அதிகாரி ரவீந்திரன் கொரோனா வைரஸ் தொடர்பான விளக்கங்களை வழங்கினார். அதிகாரிகள் செஞ்சிலுவை மாவட்டத் தலைவர் த.சேதுபதி மற்றும் சங்கச் செயலாளர், உறுப்பினர்கள், கிளை நிறைவேற்று அலுவலர், பணித்தொகுதியினர், தொண்டர்கள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டனர். (த-222)



## வற்றாப்பளை,கேப்பாபிலவு மக்களுக்கு உணவுப் பொதி

முல்லைத்தீவு, ஏப்.10

உணவுத்தேவையை நிறைவு செய்ய இடர்பட்ட முல்லைத்தீவு வற்றாப்பளை மற்றும் கேப்பாபிலவு புதிய குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த 40 குடும்பங்களுக்கான உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

சுசீலன் பௌண்டேசனின் இடர்கால விசேட நிகழ்ச்சித் திட்டமாக இந்த உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. நாட்டில் ஏற்பட்டிருக்கும் அசாதாரண சூழ்நிலையால், மக்கள் பாதுகாப்பாக வீட்டில் இருக்க வேண்டும் என்பதற்காக பிரதேச செயலகத்தின் பெயர்ப்பட்டியலின் அடிப்படையில் கிராம அலுவரின் உதவியுடன் அந்த மக்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ப-222)

## இரத்தினபுரியில் ஊரடங்கு நீடிப்பு

கொழும்பு, ஏப்.10

இரத்தினபுரி மற்றும் பெல்மதுளை பொலிஸ் பிரிவுகளில் மறு அறிவித்தல் வரை பொலிஸ் ஊரடங்குச் சட்டம் தொடரும் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

அத்துடன், இரத்தினபுரி மற்றும் பெல்மதுளை பொலிஸ் பிரிவுகளின் ஊடான போக்குவரத்தும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்கும் வகையில், தனிமைப்படுத்தல் மற்றும் நோயைத் தடுத்தல் கட்டளைச் சட்டத்தின் கீழுள்ள பிரிவுகளை மீறுவதைத் தடுக்கும் வகையில் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-22)

*எனது பெற்றோர் தனிமையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு இப்போது 75 வயதுக்கு மேலாகி விட்டது. இந்தக் கொவிட்19 தொற்றுத் தொடர்பான பரபரப்புகள் தொடங்கிய பின்னர் அவர்கள் இப்போது வீட்டுக்கு வெளியே வருவதில்லை. அவர்களுக்கு உதவி புரியும் பெண்மணியும் இப்போது அவர்கள் வீட்டுக்குப் போவதில்லை. அவர்கள் இருவரும் ஒன்றுக்கு மேற்பட்ட நோய்களோடும், பத்துக்கு மேற்பட்ட மருந்துகளோடும் இருக்கிறார்கள். ஆயினும், அவர்கள் இன்னமும் சுயமாக இயங்கக் கூடிய வல்லமையோடு இருக்கிறார்கள். இந்த ஊரடங்கு வேளையில் எனக்கு என்ன செய்வது என்று புரியவில்லை.*



# கொவிட்-19 தொற்றுநோய் பரவலினால் ஏற்பட்ட

# வாழ்க்கை மாற்றம்:

**ஓர் அகநோக்கு 07**

உங்கள் கவலை நியாயமானதுதான். கொவிட்19 காரணமாக எமது வாழ்க்கையிலும், நாம் வாழும் சூழலிலும் ஏற்பட்ட மாறுதல்கள் திறனாற்றலுடன் இயங்கிக் கொண்டிருக்கும் இளைய மற்றும் நடுத்தர வயதுடையவர்களை மாத்திரமல்லாது, முதியவர்களின் வாழ்வு முறைமையையும் மாற்றங்களுக்கு உள்ளாக்கியிருக்கின்றது.

குறிப்பாக, உங்களது பெற்றோர் போன்று தனித்து இருக்கும் முதியவர்களுக்கு இதுவரை காலமும் கிடைத்து வந்த பலவகைப்பட்ட ஆதரவுகள் தற்போதைய சூழலில் கிடைப்பதற்கான வாய்ப்புகள் குறைந்து விட்டன. உண்மையில், எமது சமூகத்தில் முதியவர்களுக்கான எந்தவொரு சேவை வழங்கல்களும் முறையாக அமைந்திருக்கவில்லை எனும் யதார்த்தம் இந்த இடர்வேளையில் மிகவும் வெளிப்படையாகத் தெரிகிறது. அவர்களுக்கான மருத்துவம், உணவு வழங்கல், பொழுதுபோக்கு, வீட்டுவேலை களில் உதவி, பணப்பரிவர்த்தனை, பாதுகாப்பு, அவசர உதவி, மற்றும் ஏனைய சமூகத் தேவைகள் போன்றவற்றை நிறைவேற்றுவதில் நாம் எவ்வளவு தூரம் பின்தங்கியிருக்கிறோம் என்பதனை இப்போது உணரக்கூடியதாக இருக்கிறது.

பல முதியவர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஒழுங்கான மருத்துவப் பராமரிப்பு தற்போது கிடைப்பதில்லை. அவர்களை வழமையாகப் பார்க்கின்ற மருத்துவர்களை இப்பொழுது கண்டுபிடிப்பது சிரமமாக உள்ளது. அவர்களுக்கோ, தங்களது வழமையான மருத்துவர்களைக் காணாதுவிட்டால் திருப்தி ஏற்படாது. பல சிறிய பிள்ளைகள் தமது பிறந்தநாள் கொண்டாட்டம் முடிவடைந்த நாளிலிருந்து தமது அடுத்த ஆண்டுக்கான பிறந்தநாள் பற்றிய கனவோடும், ஆயத்தப்படுத்தல்களோடும் இருப்பதனைக் காணலாம். அதுபோல், இரண்டாம் சிறுபராயத்தினூடாகச் செல்லுகின்ற முதியவர்களும், தமது மருத்துவரைச் சந்தித்துவிட்டு வந்த சில நாட்களிலேயே, அடுத்த சந்திப்புக்கான திகதி பற்றியும், அச்சந்திப்பில் கூற வேண்டிய முறைப்பாடுகள் பற்றியும் ஆயத்தம் செய்யத் தொடங்குவதனை நாம் அவதானிக்கலாம். சிலர் தாம் மறந்துவிடாது இருப்பதற்காக மருத்துவருக்குக் கூறவேண்டிய விடயங்கள் பற்றிய குறிப்புகளையும் எழுதி வைத்துக் கொள்வார்கள். இந்தக் கொவிட்19 தொற்று அவர்களது வழமையை, அவர்களுக்கும் மருத்துவர்களுக்கும் இருந்து வந்த உறவைக் கேள்விக் குறியாக்கிவிட்டது.

முதுமையில் வருகின்ற பொதுவான பிரச்சினைகளுள் ஒன்றாக நெகிழ்வுத் தன்மை குறைவடைதல் என்பது இருக்கின்றது. இதன் காரணமாக முதியவர்கள் தாம் கைக்கொண்டுவரும், வழமையான, பழகிய விடயங்களில் மாறுதல்கள் ஏற்படுகின்றபோது, அதற்கு ஈடுகொடுத்துச் சமாளித்துக் கொண்டு செல்வதில் சிரமப்படு கிறார்கள்.

தற்போதைய காலப்பகுதியில், பல முதியவர்க ளுக்கான மருந்துகள் வைத்தியசாலைகளில் இருந்து வீட்டிற்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. தனியார் வைத்தியசாலையில் மருந்துகள் எடுப்பவர்களுக்கு, யாராவது ஒருவர் கஷ்டப்பட்டு, நீண்ட வரிசையில் நின்று, மருத்துவக் குறிப்புகளைக் காட்டி, ஒருவாறு மருந்துகளை வாங்கி வந்து கொடுக்க வேண்டியிருக்கின்றது. இவ்வளவுக்குப் பிறகும், தங்களுக்குக் கிடைத்த சில மருந்துகள் "வழமையாகப் பாவிக்கின்ற மருந்துகளைவிட வித்தியாசமாக இருக்கின்றது" என்று சில முதியவர்கள் மனக்கிலேசம் கொள்கிறார்கள். இது இயல்பானதே.

முதியவர்களில் காணப்படுகின்ற பல்வேறு வியாதிகள், அவற்றிற்காக அவர்கள் உபயோகிக்கும் மருந்துகள் என்பன அவர்களை ஒரு குறிப்பிட்ட உணவுப் பழக்கத்தில நிலைத்து நிற்குமாறு வலியுறுத்துகின்றன. இதனைவிட, உணவை மென்று விழுங்கும் திறன், சமிபாட்டுத் தொகுதியின் ஆற்றல், மலங்கழித்தல் செயற்பாடு போன்றவற்றில் ஏற்படுகின்ற சிக்கல்களும் அவர்களைக் குறிப்பிட்ட வகையான உணவுப்பழக்கத்தை மட்டும் கைப்பிடிக்குமாறு வலியுறுத்தி நிற்கும். தற்போதுள்ள சூழலில் பல முதியவர்கள் தமக்கு ஒத்துவரக்கூடிய, தமது இயலுமைகளுக்கும், இயலாமைகளுக்கும் ஏற்ற உணவு வகைகளைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்கிறார்கள்.

இந்த கொவிட்19 தொற்றானது பெரும்பான்மையான முதியவர்களுக்குச் சிக்கல்களை ஏற்படுத்துவது அறியப்பட்டிருக்கின்றது. வயது காரணமாக ஏற்பட்டிருக்கக் கூடிய நோயெதிர்ப்புச் சக்தியின் குறைபாடு, நுரையீரல் உட்படப் பல்வேறு உறுப்புகளின் செயற்பாடுகளில் இருக்கின்ற மட்டுப்பாடுகள், அவர்களோடு இருக்கும் ஏனைய நோய்கள் போன்றன கொவிட்19 தொற்றின் தாக்கத்தைத் தீவிரமாக்கு வதில் பங்களிப்புச் செய்கின்றன. அதற்காக முதியவர்கள் மட்டும்தான் இந்தத் தொற்றின் தீவிரப் பாதிப்புகளுக்கு உள்ளாகிறார்கள் என்றும் இல்லை. ஆரோக்கியமாக இருந்த இளைய வயதினர் பலரும் நோயின் தீவிர பாதிப்புகளுக்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்பதனையும் நாம் நினைவிற் கொள்ளவேண்டும்.

முதிய வயதினருக்கு இந்தத் தொற்றின் தாக்கம் பாரதூரமானவையாக அமைந்துவிடக்கூடும் என்பதனால் முதியவர்களை இந்தத் தொற்றிலிருந்து பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம் அனைவரையும் சார்கின்றது. தனியே வசிக்கின்ற முதியவர்கள் தமது வதிவிடத்தை விட்டு வெளிச் சூழலுக்கு வருகின்ற பொழுது, அவர்கள் முகக்கவசம் அணிந்து கொள்வதனை உறுதிப்படுத்த வேண்டும். இவ்வாறு முகக்கவசம் அணிவதானது அவர்கள் கொவிட்19 தொற்றுத் தொடர்பாகத் தொடர்ச்சியான விழிப்புநிலையில் இருப்பதற்கு உதவுகின்றது. ஆயினும், இந்த நடைமுறையிலும் சிக்கல்கள் இருக்கின்றன. ஒரு முகக்கவசத்தை எவ்வாறு முறையாக அணிவது என்பது பற்றி அவர்களுக்கு யாரும் பொறுமையாகச் சொல்லிக் கொடுப்பதில்லை. நாம் சமூகத்தில் அன்றாடம் தரிசிக்கும் முதியவர்கள் பலர், முகக்கவசத்தை விதவிதமாக அணிந்து கொண்டிருப்பதனையும், அதனோடு எப்பொழுதும் கைகளால் அளைந்து கொண்டிருப்பதனையும் காணமுடிகிறது. குறிப்பாக, அவர்கள் கதைக்க வேண்டி வருகின்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் முகக்கவசத்தை இழுத்துவிட்டு அல்லது அகற்றிவிட்டு, வாய்திறந்து உரையாடுவதனைக் காணலாம்.

இதுபோல், பிள்ளைகளின் வீட்டில் இருக்கின்ற, அல்லது முதியவர்களைப் பராமரிக்கும் நிலையங்களில் இருக்கின்ற முதியவர்கள் ஒரு குறிப்பிட்ட நேர இடைவெளிக்கு ஒரு தடவையும், தனிமையில் இருக்கின்ற முதியவர்கள் வெளியில் போய்விட்டு வந்ததன் பின்பும் கட்டாயமாகத் தமது கைகளுக்குச் சவர்க்காரமிட்டு, நுரையெழுப்பிக் கழுவ வேண்டியது அவசியமானது. இது எமக்கும் நன்கு தெரியும். ஆயினும், இதனை அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதிலும், இந்தப் புதிய நடைமுறையை அவர்களது வழமைக்குள் கொண்டு வருவதிலும் சவால்கள் ஏற்படுகின்றன. மறுதலையாக முதியவர்கள் இருக்கின்ற வீடுகளில் இருப்போரும், முதியவர்களைப் பராமரிக்கின்ற பணி செய்வோரும், முதியவர்களுக்கு அருகாமையில் செல்ல வேண்டிய சந்தர்ப்பங்களில் தாமும் முகக்கவசம் அணிவதோடு, ஏனைய பொருத்தமான அணுகுமுறைகள் மூலம் தொற்று ஏற்படாத வண்ணம் தமது நடவடிக்கைகளை மேற்கொள்வது சிறந்தது. குறிப்பாக, படுக்கையில் இருக்கும், அல்லது தங்களது நாளாந்தச் செயற்பாடுகளைச் செய்வதற்கு உதவி தேவைப்படும் முதியவர்களுக்குச் சேவைகளை வழங்கும்போது, அவ்வாறான சேவைகளை வழங்குபவர்கள் தகுந்த சுகாதாரப் பழங்கங்களைக் கைக்கொள்ள வேண்டும்.

சில முதியவர்கள் இந்த உலகளாவிய தொற்றுத் தொடர்பாக அதீத கவலையோடும், யோசனைகளோடும் இருப்பதனையும் அவதானிக்க முடிகிறது. சிலர், இருக்கின்ற பிரச்சினைகளோடு, இந்த வருத்தமும் வந்தால் என்ன செய்வது எனக் கவலைப்படுகிறார்கள். வேறு சிலர், வெளிநாடுகளில் வசிக்கும் தமது பிள்ளைகளின் நலம் பற்றிய பிரார்த்தனைகளோடு இருக்கிறார்கள். சிலர் தம்மால் கோவிலுக்குப் போக முடியவில்லையே என வருந்துகிறார்கள், வேறு சிலர் தம்மிடம் வழமையாக வந்து போகின்றவர்கள் இப்போது வருவதில்லையே எனக் கவலைப்படுகிறார்கள். தொழிற்படும் ஆற்றலில் குறைபாடு உடையவர்களுக்கு, மிகவும் அடிப்படையான வசதிகளோடு மட்டும் இருப்பவர்களுக்கு, அல்லது ஓய்வுதியத்தை மட்டும் நம்பிச் சீவியம் நடத்துபவர்களுக்கு அடுத்த வேளை உணவு கிடைப்பது பற்றிய கரிசனை. நோய்வாய்ப்பட்டவர்களுக்கு அவர்களது குருதிப் பரிசோதனைகள், இயன்மருத்துவ அப்பியாசங்கள் கிடைக்கவில்லையே என்ற வருத்தம்.

இவ்வாறு, கொவிட்19 தொற்றுநோயும், அதனைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்பாடுகளும், எமது சமூகத்தில் இருக்கின்ற முதியோர்களுக்குப் பல்வேறுபட்ட பிரச்சினைகளை ஏற்படுத்தியிருக்கின்றன.

பிள்ளைநேயப் பாடசாலை என்கிற ஒரு கருத்துருவாக்கம் இருப்பது நாம் எல்லோரும் அறிந்ததே. அதுபோல் தற்போதுள்ள சூழலினால் எழுந்துள்ள சவால்களை நிவர்த்தி செய்யும் நடவடிக்கைகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தும்போது, அதில் முதுமைநேய விடயங்கள் அடங்கியிருப்பது அவசியமானது. நெருக்கடி நிலைமைகள் வருகின்றபொழுதும், இயல்பான நிர்வாக இறுக்கங்கள் ஒரு தளர்வு நிலையில் இருக்கின்ற பொழுதும், புதிய மற்றும் ஆக்கத்திறனுடனான அணுகுமுறைமைகளுக்குச் செயலுருவம் கொடுக்கும் வாய்ப்புகள் அதிகரிக்கின்றன. கொவிட்19 நெருக்கடி நிலையும் ஆக்கத் திறனுடனமைந்த பல்வேறு செயற்பாடுகளுக்கு வாய்ப்பளித்திருக்கிறது. உதாரணமாக, நாம் வீடுகளில் இருந்தபடியே பணிபுரிவதற்கும், வகுப்பறைகளுக்குப் போகாமலே கற்பதற்கும், வாகன ஓட்டங்களைக் குறைப்பதற்கும், வீடுகளில் சமைப்பதற்கும், உடற்பயிற்சி செய்வதற்கும் இந்த நெருக்கடி நிலை வழிசமைத்துத் தந்திருக்கின்றது. அதுபோல், இந்த நெருக்கடி நிலையில் சேவைகளை வழங்குகின்ற அமைச்சுகள், திணைக்களங்கள், நிறுவனங்கள் ஆகியவையும், தனியார் அமைப்புகளும் தமது சேவை வழங்கல்களின்போது முதுமைநேய விடயங்களைக் கவனத்திலெடுத்துக் கொள்வது காலத்தின் தேவையாகின்றது.

அண்மையில், முதியவர்களுக்கான ஓய்வுதியத்தை அவர்களது வீடுகளுக்குக் கொண்டு சென்று வழங்கும் நடைமுறையொன்று பற்றி ஆலோசிக்கப்பட்டது. இது மிகவும் வரவேற்கத் தக்கது. அதுபோல் அவர்களுக்கான மருத்துவ சேவைகள், உடல் உள ஆரோக்கியச் செயற்பாடுகள், உணவு தொடர்பான தேவைகள் போன்றவற்றை வழங்குவதிலும் முதுமைநேய" அணுகுமுறை தேவைப்படுகின்றது. இந்தக் காலகட்டத்தில் கொவிட்19 தொற்றுத் தொடர்பான சரியான தகவல்களைக் கிரமமாக வழங்குவதற்கும் ஒரு பொறிமுறை உருவாக்கப்பட வேண்டியிருக்கின்றது.

முதியவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதில் நாம் எம்மால் முடியுமானளவு முயற்சிகள் எடுக்கலாம். குறிப்பாக, தற்போது கிடைத்துள்ள இடை ஓய்வைப் பயன்படுத்தி, அவர்களுடனான தொடர்புகளை அதிகரிக்கலாம். நவீன தொலைத்தொடர்பு சாதனங்களும், கணினிகளும் நாம் தொலைதூரத்தில் இருந்தாலும், அவர்களுடன் தொடர்புகளைப் பேணுவதற்கு உதவுகின்றன. ஊரடங்கு, சுய தனிமைப்படுத்தல், சமூக விலகல் என பல்வேறு காரணங்களுக்காக நாம் வீடுகளுக்குள் அடங்கியிருக்கின்ற காலத்திலும், முதுமையில் இருக்கின்ற எமது பெற்றோருடனும், உறவினருடனும், மற்றும் தெரிந்தவர்களுடனும் தொடர்பில் இருப்போம். அனைத்து வேளைகளிலும் அவர்களுக்குத் தொற்று ஏற்படாத வண்ணம் நடந்து கொள்வோம். இங்கே கூறப்பட்ட விடயங்கள் பலவற்றில் உங்களது பங்களிப்பு நிச்சயம் இருக்கும். இருக்க வேண்டும். சமூகத்தின் தேவையொன்றிற்கு அந்தச் சமூகத்திலிருந்து தீர்வுகள் முகிழ்த்தெழுதலே இயற்கையானது. அதுவே ஆரோக்கியமானது. அது அவ்வாறே நடக்க நாம் எல்லோரும் இறைஞ்சுவோம்.

# சுயலாபத்துக்காக மக்களை பலிக்கடாவாக்குகின்றது அரசு

*சொல்கிறார் இரா.சாணக்கியன்*

மட்டக்களப்பு, ஏப்.10
பொதுஜன பெரமுன அரசானது தங்களுடைய சுயலாப அரசியலுக்காக மக்களைப் பலிக்கடாவாக்குகின்றது என இராசமாணிக்கம் மக்கள் அமைப்பின் தவிசாளரும், தமிழ் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளருமான இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று வியாழக்கிழமை அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் நாடாளுமன்றம் கடந்த மார்ச் மாதம் 02 ஆம் திகதி நள்ளிரவுடன் கலைக்கப்பட்டு, ஏப்ரல் 25 ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. மார்ச் 19 ஆம் திகதியுடன் வேட்புமனு தாக்கல் நிறைவடைவதாகவும் வர்த்தமானி வெளியிடப்பட்டது.

உலகையே விழிபிதுங்க வைத்த கோவிட் 19 வைரஸ் தாக்கம், அதற்கு முன்னரே இலங்கை உட்பட பல நாடுகளுக்கு உக்கிரமடைந்திருந்த காலப்பகுதியாகும்.

ஸ்ரீ லங்கா சுதந்திர பொதுஜன முன்னணியின் கூட்டு கலைந்துவிடும் என்னும் காரணத்தினால், தந்திரோபாயமாக வேட்புமனுவைப் பெற்றுக் கொண்டதன் பின்னரே ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்தியுள்ளனர். இதனை முன்னரே அமுல்படுத்தியிருந்தால் இன்னும் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திருக்கலாம்.

தங்களின்உட்கட்சிபூசலால் கொள்ளை நோய்க்கு மக்களைபலியாக்கமுனைப்பு செய்திருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

அதுமட்டுமன்றிகொரோனா வைரஸ் தொற்று பரிசோதனை ஒரு நாளைக்கு 300 பேருக்கு மேற்கொள்ளப்படுகிறது. அதனை ஆரம்பத்தில் இன்னும் அதிகரித்திருந்தால் மேலும் பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கலாம். அந்தவிடயத்தில் அரசு தவறு செய்துவிட்டது.

மக்களை இன்னல்களுக்குள் இட்டுச்செல்லும் செயற்பாடுகளை அரசு நிறுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (ந)

# நிவாரணத்தை வழங்கும்போது வேட்பாளரைப் பிரபலப்படுத்தாதீர்!

## தேர்தல் ஆணைக்குழு வலியுறுத்து

**கொழும்பு, ஏப்.10**

**இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கதை அடுத்து நாடு முழுவதும் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும்போது அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களைப் பிரபலப்படுத்தும் வகையிலான செயற்பாடுகளைத் தவிர்க்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய வலியுறுத்தியுள்ளார்.**

"தேர்தல் காலப்பகுதி என்பதாலும் நாடு ஆபத்தை எதிர்கொண்டுள்ள தருணம் என்பதாலும் தேர்தல்கள் ஆணைக்குழு மீது சுமத்தப்படுகின்ற ஆதாரமற்ற விமர்சனங்களுக்கு பதிலளிக்க வேண்டியுள்ளது .எனினும், விமர்சிப்பவர்களுக்கு அதே பாணியில் எம்மால் பதிலளிக்க முடியாது . மக்களுக்கு நிவாரணம் வழங்கும் செயற்பாடுகளுடன் அரசியல்வாதிகள் தொடர்புபடக் கூடாது என ஒரு போதும் கூறவில்லை. எனினும், இந்த நிவாரணப் பணிகள் ஊடாக அரசியல்வாதிகள், வேட்பாளர்கள் அல்லது அவர்களது கட்சிகள் பிரபலப்படுத்தப்படக் கூடாது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றேன். தேர்தல் காலப்பகுதி என்பதால் மாத்திரம் அல்லாது ஒழுக்கமுள்ள நாட்டில் வழமையான காலப் பகுதியில் கூட அத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்ளக் கூடாது. தேர்தல்கள் ஆணைக்குழு எவருக்கும் சார்பாகச் செயற்படவில்லை. மக்களுக்கும் ஜனநாயகத்துக்கும் அரசமைப்புக்கும் மாத்திரம் ஆணைக்குழு சார்பாகச் செயற்படும்" - என்றார். (ப-22)

# இலங்கை வங்கியின் நடமாடும் சேவை இன்று தென்மராட்சியில்

இலங்கை வங்கியின் யாழ்ப்பாண மாவட்டக் கிளையினரால் தென்மராட்சி கிழக்கில் இன்று நடமாடும் வங்கிச் சேவை ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச வாடிக்கையாளர்கள் நலன் கருதி இன்று முற்பகல் 9.00 மணி தொடக்கம் இந்த நடமாடும் சேவை நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்து.

நடமாடும்சேவையானது காலை 9.00 மணிக்கு மிருசுவில் வடக்கிலும், 10.30 மணிக்கு உசன், கந்தசுவாமி ஆலய முன்றலிலும், பகல் 12.30 மணிக்கு தவசிகுளம் பகுதியிலும் பி.ப.2.30 மணிக்கு அல்லாரை மத்தியிலும் நடைபெறவுள்ளது. வாடிக்கையாளர்கள் தங்களது பணக் கொடுக்கல் வாங்கல்களை நடமாடும் வாகனத்தில் மேற்கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-9)

# நாவாந்துறை மக்களுக்கு உலருணவுப் பொதிகள்

யாழ்ப்பாணம், ஏப்.10
சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையத்தால் யாழ்ப்பாணம் நாவாந்துறை ஜே 86 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 66 முஸ்லிம் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

கொரோனா வைரஸ் தொற்றுநோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப் பட்டுள்ள ஊரடங்குச்சட்டமானது காலவரையறையற்று நீண்டு செல்கின்ற நிலையில் நாளாந்த கூலித்தொழில் செய்கின்ற மக்கள் தொடக்கம் மாதாந்த ஊதியம் பெறுகின்றவர்கள் என அனைத்து மக்களுடைய பொருளாதாரம் பெறுகின்ற வழிகளும் முடக்கப் பட்டுள்ளன. அவ்வாறு வறுமையில் வாடும் மக்களுக்குத் தேவையான உணவுப் பொதிகளை சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையம் வழங்கிவருகிறது. காலை முஸ்லிம் சமூகத்தினர் வாழ்கின்ற யாழ்ப்பாணம் நாவாந்துறை ஜே 86 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 66 முஸ்லிம் குடும்பங்களுக்கு இந்த உலர் உணவுப்பொதிகள் நேற்று வழங்கப்பட்டன. (ப-20)

# வீட்டுத் தோட்டத்தைப் பற்றி மக்கள் சிந்திக்க வேண்டும்

## தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் செயலர் தெரிவிப்பு

கொடிகாமம், ஏப்.10
கொரோனா பிரச்சினை தொடருமானால் உணவுப் பிரச்சினையும் அதன் பின்னால் தொடர்ந்து கொண்டே வரும் .எனவே நாங்கள் தூர நோக்கில் வீட்டுத்தோட்டத்தைப் பற்றியும் சிந்திக்க வேண்டும் என்று தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் செயலர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்தநெருக்கடியானசூழ்நிலையைப் புரிந்துகொண்டு ஓரளவுக்காவது நிம்மதியைத் தேடிக் கொள்வதற்காக சுகாதாரப் பகுதியினரால் அறிவுறுத்தப்படும் ஆலோசனைகளைப் பின்பற்றி நடந்து கொள்ள வேண்டும். அத்தோடு கொரோனாத் தொற்று தொடருமானால் உணவுப் பிரச்சினையும்அதன்பின்னால்தொடர்ந்து கொண்டே வரும். அரிசி, மா ,சீனி போன்ற உணவுப் பொருள்கள் கையிருப்பில் இல்லை என்றால் நாங்கள் எமது உடலை திடகாத்திரமாக வைத்துக்கொள்வதற்கு ரெடிமேட் உணவுப் பொருள்களுக்குப் பதிலாக மாற்று உணவு வகைகளைத்தான் உண்ண வேண்டும்.

ஆகவே தான் நாங்கள் தூர நோக்கில் வீட்டுத்தோட்டத்தைப் பற்றியும் சிந்திக்க வேண்டும், அதற்கான தளத்தை அத்திவாரத்தை இப்பொழுது ஆரம்பிக்க வேண்டும். இல்லாவிடில் நாங்கள் பெரும் ஆபத்தை எதிர்நோக்க வேண்டியிருக்கும் -என்றார். (ஐ-159)






# ஊரடங்கு தளர்ந்த போது..!

மன்னார்,ஏப்.10
மன்னார் மாவட்டத்தில் நேற்று ஊரடங்கு தளர்த்தப்பட்டவேளை மக்கள் பொருள்களை கொள்முதல் செய்வதில் ஈடுபட்டனர்.

தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சபை போக்குவரத்து சேவைகள் இடம்பெறாமையாலும், போதிய பணம் கையிருப்பில் இல்லாமையாலும் மன்னார் நகருக்கு மக்களின் வரவு குறைவாக காணப்பட்டது. (ஐ-60)



## மாதர் சங்கம் வழங்கிய உலர் உணவுப் பொதிகள்

யாழ்ப்பாணம், ஏப்.10

யாழ்.பிரதேச செயலக மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் சமாசத்தின ரால், 560 உலர் உண வுப் பொதிகள் வழங்கப்பட் டன. யாழ்.பிரதேச செய லாளர் பிரிவுக்குட்பட்ட 28 கிராம சேவையாளர் பிரிவுக ளில் வசிக்கும், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக் களுக்கு விநியோகிப்ப தற்காக இந்த உலர் உண வுப் பொதிகள், சமாசத் தின் தலைவர், கலாநிதி நா. தனேந்திரனால் யாழ் பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டன. இவ் வாறு ,கையளிக்கப்பட் டுள்ள பொருட்கள் அந் தந்த கிராம சேவையாளர் பிரிவுகளில் வசிக்கும் வறுமைக்கோட்டுக்குட் பட்ட தேர்வு செய்யப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட் டன. (ந)

# அதிகாரிகள் அதிரடிப் பாய்ச்சல் பதுக்கல் வர்த்தகர்கள் சிக்கினர்

### கிளிநொச்சியில் நேற்று 'தரமான' சம்பவம்

கிளிநொச்சி,ஏப்.10

**கிளிநொச்சியில் விலைக் கட்டுப்பாட்டுப் பகுதியினர், பொலிஸ், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோர் இணைந்து நேற்று மேற்கொண்ட அதிரடி நடவடிக்கை காரணமாக சில வர்த்த கர்கள் கையும் மெய்யுமாகப் பிடிபட்டனர்.**





கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பல வர்த்தகர்கள் அத்தியாவசியப் பொருள்களை அதிக விலைக்கு விற் பனை செய்வதாகவும், பொருள்க ளைப் பதுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் விலைக்கட்டுப் பாட்டுப் பகுதியினருக்குத் தகவல் கிடைத்தது. இதனை அடுத்து தெரிவு செய்யப்பட்ட சில மொத்த வியாபார நிலையங்களுக்கு திடீரெனச் சென்று பரிசோதனை நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது பதுக்கி வைக்கப்பட் டுள்ள பொருள்களான பருப்பு, ரின் மீன், அரிசி போன்ற பொருள்கள் அடையாளம் காணப்பட்டதோடு, அதிகரித்த விலையில் பொருள்கள் விற்பனை செய்தமையும் கையும் மெய்யுமாகக் கண்டு பிடிக்கப்பட்டது. காலாவதியான பொருள்களும் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து குறித்த வியாபார நிலையங்களின் உரிமையாளர்களி டம் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பொருள்களை நியாய விலையில் விற்பனை செய்து தங்களது விற்ப னைச் சிட்டை காண்பிக்கப்பட வேண் டும் என எழுத்து மூலம் உத்தரவாதக் கடிதம் பெறப்பட்டுள்ளதோடு, நீதி மன்ற நடவடிக்கைக்கும் அவர்கள் உட்படுத்தப்படவுள்ளதாக விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் தெரிவித் தனர்.

நெருக்கடியான சூழ்நிலையில் அத்தி யாவசியப் பொருள்கள் மீதான செயற்கையான தட்டுப்பாட்டை ஏற் படுத்தி, அதிகரித்த விலையில் பொருள்களை விற்பனை செய்பவர் கள் மீது தொடர்ச்சியாகக் கடும் நட வடிக்கை மேற்கொள்ளப்படும் என வும் அதிகாரிகள் மேலும் தெரிவித் துள்ளனர். (சு-214)



## மீன் பிடிப்படகைத் திருடி போதைப்பொருள் கடத்தல்

### மூவர் கைது

நீர்கொழும்பு, ஏப். 10

நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ளதைப் பயன்படுத்தி, மீன் பிடிப் படகு ஒன் றைத் திருடிச் சென்று போதைப் பொருள் கடத்தி வந்தனர் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைது செய் யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். நீர்கொழும்பு களப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன்பிடிப் படகொன்றே இவ்வாறு திருடப்பட்டுள்ளது. நீர்கொழும்பு எமில்டன் வாவி ஊடாக கொழும்பு பேலியாகொடை பெரிய பாலம் வரையில் சென்று போதைப் பொருளை வாங்கி வந்தனர் என்று அவர் கள் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 15 கிராம் வரை யிலான போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக நீர்கொழும்புப் பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (ப-114)

## கொரோனா ஒழிப்பிலுள்ள அலுவலர்களுக்கு காப்புறுதி

### ரூ.15 லட்சம் வழங்கத் திட்டம்

கொழும்பு, ஏப். 10

கொரோனா தடுப்பு நடவடிக்கை யில் ஈடுபட்டுள்ள அரச அதிகா ரிகள், ஊழியர்களுக்கு விஷேட காப்புறுதித் திட்டம் ஒன்றை இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத் தாபனம் அறிவித்துள்ளது.

இதன்பிரகாரம், 'விரு அபிமன்' எனும் பெயரில் 15 இலட்சம் ரூபா காப்புறுதி உறுதி செய்யப் பட்டுள்ளது.

கொவிட் - 19 நோய்த் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடும் அரச ஊழியர்கள் கடமையின்போது உயிரிழந்தால், அவர்களின் குடும்பத்துக்கு, 15 இலட்சம் ரூபா காப்புறுதி வழங்கப்பட வுள்ளது.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத் தாபனம், கொவிட்19 சுகாதார சமூக நிதியத்துக்கு 50 இலட்சம் ரூபா பணத்தை அன்பளிப்புச் செய்துள்ளது என்றும் தெரிவிக் கப்பட்டது. (த-114)

## பிற்போடப்பட்ட வசந்த கால விழா

நுவரெலியா, ஏப். 10

நுவரெலியாவில் வருடாந்தம் ஏப்ரல் மாதம் நடைபெறும் வசந்தகாலக் கொண்டாட் டத்தை இம்முறை ஓகஸ்ட் மாதத்தில் அல்லது அதற்கு பின்னரான காலப்பகுதியில், நடத் துவது தொடர்பில் பரிசீலிக்கப்பட்டுவருகின் றது என்று நுவரெலியா மாநகரசபை மேயர் சந்தன லால் கருணாதிலக்க தெரிவித்தார். இது தொடர்பில் அவர் நேற்று ஊடகங்களி டம் தெரிவித்ததாவது,

இந்த ஆண்டுக்குரிய வசந்தகால நிகழ்வு களை நடத்துவதற்கு கடந்த டிசம்பர் மாதம் முதலே நுவரெலியா மாநகரசபை தயாராகி வந்தது. எனினும், நாட்டில் தற்போது ஏற்பட் டுள்ள நிலைமையைக் கருத்திற்கொண்டு, அதனைத் தற்காலிகமாக ஒத்திவைப்பதற் குத் தீர்மானிக்கப்பட்டது.

தற்போது சுகாதாரம் சார்ந்த விடயங்க ளுக்கே முன்னுரிமை வழங்கிவருகின் றோம். குறைந்தவருமானம் பெறும் குடும் பங்களுக்கு உலர் உணவுப் பொருட்களும் விநியோகிக்கப்பட்டுவருகின்றன.

தற்போதைய சூழலில் நுவரெலியா நகரில் பெரிய ஹோட்டல்களை நடத்துபவர்கள் உட்பட சிறு வியாபாரிகள் முதல் அனைவ ரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களை நாம் பாதுகாக்க வேண்டும். அதற்காக விசேட வேலைத் திட்டமொன்றை முன்னெடுப்ப தற்கு எதிர்பார்க்கின்றோம் - என்றார். (ந)

## 29 நாள்கள் தனிமை 37 பேர் வெளியேறினர்

29 நாள்கள் தனிமைப்படுத்தலை முடித்து கந்தக்காட்டிலிருந்து இருந்து 37 பேர் நேற்று வெளியேறினர்.

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வந்த 37 இலங்கையர்கள் 29 நாள் கள் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து, தத்தமது வீடுகளுக்குத் திரும்பி யுள்ளனர்.

இத்தாலி, தென்கொரியா ஆகிய நாடுக ளிலிருந்து வருகை தந்த இவர்கள் கந்தக்காடு இராணுவ முகாமிலுள்ள தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப் படுத்தப்பட்டனர்.

கொழும்பு, குருநாகல், புத்தளம், நீர் கொழும்பு ஆகிய பிரதேசங்களிலுள்ள அவர்களது வீடுகளுக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டனர். வெளிநாடு களிலுந்து வருகைத் தந்து, அதிக நாள் கள் தனிமைப்படுத்தலுக்கு உள்ளான முதலாவது குழு இதுவென்று தெரிவிக் கப்பட்டுள்ளது. (சு-114)

# கர்ப்பிணிகளுக்கும் கொரோனா: சிகிச்சை குறித்து அக்கறை!

*மட்டு.மகப்பேற்றியல், பெண்நோயியல் நிபுணர் தெரிவிப்பு*

**மட்டக்களப்பு, ஏப்.10**

**கர்ப்பிணிப் பெண்களில் கொரோனா வைரஸ் தொற்று ஏற்படுத்தும் பாதிப்பும் சிகிச்சை முறை குறித்தும் அக்கறை கொள்ள வேண்டியுள்ளது என மட்டக்களப்பு, போதனா வைத்தியசாலையின் மகப்பேற்றியல், பெண்நோயியல் நிபுணர் மருத்துவ கலாநிதி கே.ஈ.கருணாகரன் தெரிவித்தார்.**

தற்போது ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று நிலையில் கர்ப்பிணிப் பெண்களின் பராமரிப்பு தொடர்பில் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இவ்வைரஸ் தாக்கம் குறித்த அறிவும், ஆராய்ச்சி முடிவுகளும் அதற்கான பரிகாரம் மற்றும் மருந்தின் பாவனையும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளதனால் பாதிப்பின் கனமும் அதிகமானதாகவே இருக்கும்.

இந்த நிலையில் கர்ப்பிணிப் பெண்களில் இவ்வைரஸ் தொற்று ஏற்படுத்தும் பாதிப்பும் சிகிச்சை முறை குறித்தும் கவனிக்கவேண்டியுள்ளது.

இலங்கையில் குறிப்பாக கொழும்பு மாநகரில் காசல்வீதி பெண்கள் வைத்தியசாலை இத்தகைய வைரஸ் நோய்த்தாக்கத்துக்குள்ளாகும் கர்ப்பிணிப் பெண்களுக்கான சிகிச்சை நிலையமாக ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன், கொரோனா நோயாளிகளைக் கையாளுகின்ற வைத்தியசாலைகளும் இத்தகைய தாய்மாருக்கான சிகிச்சை நிலையங்களாகும் வாய்ப்பும் உள்ளது.

காய்ச்சல், சளிச்சுரம் போன்ற நோய் அறிகுறிகள் தென்படும் கர்ப்பவதித் தாய்மார் உடனடியாக வைத்திய கவனிப்புக்குள் உட்படுவதுடன் ஏனையோர் முடிந்தவரையில் வீட்டில் தங்கியிருத்தலும் இந்த நோய்த்தாக்கத்தின் பாதிப்பிலிருந்து விடுபட எமக்கு உதவியாக இருக்கும்.

மேலும் பொது இடங்களுக்குச் செல்லாதிருத்தல், சுய சுத்தம் பேணல் போன்ற அறிவுறுத்தல் நடைமுறைகளை கர்ப்பவதிகள் கடைப்பிடிப்பதும் அவசியமாகின்றது.

உலகளாவிய ரீதியில் இதுவரையில் ஒருசில கர்ப்பிணித் தாய்மார்களே கொவிட் 19 வைரஸ் தொற்றுக்குள்ளாகி அடையாளங் காணப்பட்டுள்ளனர். இவ்வாறான 34 தாய்மாரில் மேற்கொள்ளப்பட்ட கணிப்புக்களின் பிரகாரம் இவர்கள் எவருக்கும் பாரதூரமான நோய்த் தாக்கம் காணப்படவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தகைய தாய்மாருக்கான பிரத்தியேக கவனிப்பு ஏனைய தொற்றாளர்களுக்கு உள்ளவாறாகவே கடைப்பிடிக்கப்படல் வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றது. இவர்கள் தனிமைப்படுத்தப்படுவதுடன் தங்கள் பிரதேச சுகாதார சேவைப் பணியாளர்கள், பிரசவம் செய்யவிருக்கும் வைத்தியசாலை மற்றும் மகப்பேற்றியல் நிபுணர் ஆகியோருக்கும் அறிவிக்கப்படல் வேண்டும். இதன்மூலம் இத்தாய்மார் 'எத்தகைய வைத்தியசாலையில் பிரசவிக்க வேண்டும்' என்பதனை முன்கூட்டியே தீர்மானித்து அங்கு அனுப்பிவைக்கப்படல் அவசியமாகின்றது. இது முக்கியமானது. ஏனெனில் கொவிட் 19 வைரஸ் தொற்று ஏற்பட்ட பெரும்பாலான தாய்மாரில் குறைமாதப் பிரசவம் நடைபெற்றுள்ளதனை அவதானிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால் முன்கூட்டிய நடவடிக்கை அவசியமாகின்றது- என்றார். (ப-150)

# முதியவர்களுக்கு சத்துணவு 10 லட்சம் ரூபா ஒதுக்கீடு

*மானிப்பாய் பிரதேச சபை முன்மாதிரி*

மானிப்பாய்,ஏப்.10

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையினரால் 10 இலட்சம் ரூபாவில் முதற் கட்டமாக ஆயிரத்து 250 மூத்த பிரஜைகளுக்கு சத்துணவுப்பொதிகள் வழங்கும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன் தெரிவித்ததாவது,

கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தால் மக்கள் பெரிதும், இயல்பு நிலையை இழந்துள்ளனர். இவர்களுக்கான உதவிகளை வழங்கும் பணிகள் பல வழிகளிலும் எம்மால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. முதியவர்கள், நலிவுற்றோர்களுக்குத் தொற்றின் பாதிப்பு உயர்வாக இருப்பதனால், முதியவர்களுக்கு விசேடமாக உதவித்திட்டங்கள் வழங்கப்பட வேண்டும் என்று சபைக் கூட்டத்தில் மக்கள் பிரதிநிதிகளால் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைவாக முதியோருக்கான விசேட திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வருமுன் காப்போம் செயற்றிட்டத்தின் கீழ் முதியவர்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டம் வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சுகாதார வைத்திய அதிகாரியின் ஆலோசனைக்கமைவாக, முதியோர்களின் நலன்கருதி அவர்களது உடல்நலனுக்கு உகந்தவகையில் அரிசிமா மற்றும் சத்துமா என்பன வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இதற்காக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் இருந்து பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. சுகாதார பரிசோதகர்களின் மேற்பார்வையின் கீழ் பொதியிடும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன

இதுவரை உதவிகள் எதுவும் வழங்கப்படாத மூத்த பிரஜைகள் என்று பிரதேச செயலகத்தினால் உறுதிப்படுத்தப்பட்டவர்களுக்கு கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக செயலாளர் மற்றும் பிரதேச சபை உத்தியோகத்தர்களால் கிராம சேவையாளரின் உறுதிப்படுத்தலுடன் சந்துணவுப்பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

முதற்கட்டமாக பிரதேச செயலகத்தால் உறுதிப்படுத்தப்பட்ட ஆயிரத்து 250 மூத்தபிரஜைகளுக்குச் சத்துணவு வழங்கப்பட்டு வருகின்றது. தொடர்ந்து கட்டம் கட்டமாக இந்தச் செயற்றிட்டம் எம்மால் முன்னெடுக்கப்படும்.ஏனைய பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்குவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் - என்றார். (க-115)



# காட்டுக்குள்ளே கசிப்பு இளையோர் முறியடிப்பு

வவுனியா,ஏப்.10

வவுனியா பூவரசங்குளம், தட்டாங்குளம் காட்டுப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட கசிப்பு உற்பத்தி நடவடிக்கை, வாரிக்குட்டியூர் இளைஞர்களால் நேற்று முறியடிக்கப்பட்டுள்ளது.

காட்டுக்குள் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதை அறிந்த வாரிக்குட்டியூர் இளைஞர்கள், பூவரசங்குளம் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தனர். அத்துடன் அப்பகுதிக்குச் சென்று முற்றுகையிலும் இறங்கினர். இதனையடுத்து அங்கு கசிப்புக் காய்ச்சிக் கொண்டிருந்தவர்கள் தப்பியோடியுள்ளனர்.

கசிப்புக் காய்ச்சுவதற்காக வைக்கப்பட்டிருந்த பொருள்கள் மற்றும், பரல்கள் வாரிக்குட்டியூர் இளைஞர்களால் மீட்கப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன.

ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், அனைத்து மதுபான நிலையங்களும் மூடப்பட்டுள்ளன. இதனால் கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள் கிராமங்களில் அதிகரித்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-110)

# நாடாளுமன்றம் இயங்கினால் நாட்டில் ஜனநாயகம் வாழும்

*முன்னாள் சபாநாயகர் தெரிவிப்பு*

கொழும்பு, ஏப்.10

'ஒரு நாட்டில் ஜனநாயகம் நிலவவேண்டுமெனில் அங்கு நாடாளுமன்றம் இயங்கவேண்டும். எனவே, நாடாளுமன்றம் தேவையில்லை கூட்டவே வேண்டியதில்லை என்றெல்லாம் முன்வைக்கப்படும் கருத்துகள் ஏற்புடையவை அல்ல' என்று முன்னாள் சபாநாயகர் கருஜய சூரிய தெரிவித்தார்.

கொரோனா விவகாரம் உட்பட சமகால நிலவரம் தொடர்பில் முகநூல் வாயிலாக நேற்று இடம்பெற்ற நேரலையில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'ஒரு நாட்டில் ஜனநாயக ஆட்சி நிலவவேண்டுமெனில் நாடாளுமன்றம் செயற்படவேண்டும். எனவே, நாடாளுமன்றத்துக்கு எதிராக அதாவது நாடாளுமன்றம் தேவையில்லை என முன்வைக்கப்படும் கருத்தை ஜனநாயகத்தை விரும்பும் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரும் ஏற்கமாட்டார்கள் என்றே நம்புகின்றேன். 1932ஆம் ஆண்டில் ஜேர்மனியிலும் இப்படியான பரப்புரை இடம்பெற்றது. இறுதியில் முழு உலகமுமே துன்பப்பட்டது. ஆகவே, ஜனநாயக விரோதக் கருத்துகளை ஊடகங்களும் ஊக்குவிக்கக்கூடாது.' என்றார்.

அதேவேளை, தற்போதைய சூழ்நிலையில் நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜே.வி.பி, தமிழ் முற்போக்கு கூட்டணி, ஜாதிக ஹெல உறுமய வின் பிரதிநிதிகள் இதன்போது வலியுறுத்தினர். எனினும், அதற்கான தேவை எழவில்லை என விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார். (ம-44)



# விபுலானந்தாக் கல்லூரியும் நேற்று நிவாரணப் பணி

திருகோணமலை விபுலானந்தா கல்லூரியின் அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்களின் நிதிப்பங்களிப்பில் கல்லூரியில் கல்வி கற்கும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவ, மாணவிகளின் 40 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. சுமார் 1000 ரூபா பெறுமதியான அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகள் நேற்று கல்லூரியில் வைத்து வழங்கப்பட்டன. இரண்டாம் கட்டமாக மேலும் 40 குடும்பங்களுக்கு நிவாரணப் பொதிகள் வழங்கப்படஉள்ளன என கல்லூரியின் அதிபர் ஆர். ஜெரோம் தெரிவித்தார். (ப-40)

# கொரோனாவை வைத்து அரசியல் செய்யாதீர்கள்

## அமெரிக்க அதிபர் ட்ரம்புக்கு டெட்ராஸ் அதானம் சாட்டை!

வொஷிங்டன், ஏப்ரல். 10

அதிகமான சவப்பெட்டிகளை சுமக்க விரும்பவில்லையென்றால், தயவு செய்து கொரோனா வைரஸ் விவகாரத்தில் அரசியல் செய்யாதீர்கள், உலக நாடுகளிடையே ஒற்றுமை இருந்தால்தான் கொரோனா வைரஸை வீழ்த்தமுடி யும் என்று உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ராஸ் அதானம் கெப்ரியேசஸ் அதிபர் ட்ரம்ப்புக்குப் பதிலடி கொடுத்துள்ளார்.

கொரோனா வைரஸால் அமெரிக்கா மோசமாக பாதிக்கப்பட்டு வருகிறது. இது வரை அங்கு 4 லட்சம் பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளார்கள், 14 ஆயிரம் பேர் உயிரிழந்துள்னர். இதனால் அதிபர் ட்ரம்புக்கு தொடர்ந்து மக்கள் மத்தியில் அழுத்தம் ஏற்பட்டுள்ளது. கொரோனா வைரஸை எப்படியாவது கட்டுக்குள் கொண்டுவர முயன்று வருகிறார். ஆனால், சீனா கொரோனா வைரஸிலருந்து மீண்டு இயல்பு நிலைக்கு திரும்பி வருகிறது. இதைப் பார்த்த அதிபர் ட்ரம்ப் தனது கோபத்தை உலக சுகாதார அமைப்பின் மீது திருப்பினார்.

கொரோனா வைரஸ் குறித்து முன்கூட்டியே போதுமான எச்சரிக்கை அறிவிப்புகளை உலக சுகாதார அமைப்பு தெரிவிக்கவில்லை. சீனாவுக்கு ஆதரவாக உலக சுகாதார அமைப்பு நடப்பதால், இனிமேல் உலக சுகாதார அமைப்புக்கு வழங்கும் நிதியை நிறுத்தப்போகிறோம் என்று அதிபர் ட்ரம்ப் குற்றம்சாட்டியிருந்தார்.

இந்த நிலையில் உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ராஸ் அதானம் கெப்ரியேசஸ் ஜெனிவாவில் நேற்று நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவரிடம் அதிபர் ட்ரம்பின் குற்றச்சாட்டு குறித்து நிருபர்கள் கேள்வி எழுப்பினர்.

அவர் தெரிவித்த பதில் வருமாறு:

கொரோனா வைரஸ் மிகத்தீவிரமாக உலகம் முழுவதும் பரவி வருகிறது. இதைத் தடுக்க உலக நாடுகளுக்கு இடையே ஒற்றுமையும், ஒருங்கிணைப்பும் மிகவும் அவசியம். சீனாவும், அமெரிக்காவும் ஒருங்கிணைந்து செயல்பட்டு இந்த ஆபத்தான எதிரியைத் தோற்கடிக்க வேண்டும் நான் உலகம் முழுவதும் உள்ள அரசியல் கட்சிகளைக் கேட்டுக் கொள்வதெல்லாம் உங்கள் மக்களைக் காப்பாற்ற வேண்டும், தயவு செய்து கொரோனா விவகாரத்தில் அரசியல் செய்யாதீர்கள்.

நீங்கள் அதிகமான சவப்பெட்டிகளை உங்கள் தோளில் சுமக்க விரும்பவில்லையென்றால், கொரோனா விவகாரத்தில் அரசியல் செய்யாதீர்கள். இது நெருப்புடன் விளையாடும் விளையாட்டு. உயிர் பலி எண்ணிக்கையும், பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கையும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

என் மீது தனிப்பட்ட விமர்சனங்கள் வந்தாலும் நான் இந்த பணியை கைவிடமாட்டேன். ஒரு நீக்ரோ, கறுப்பினத்தவர் என்ற வகையில் நான் பெருமைப்படுகிறேன். என்னை நீக்ரோ, கறுப்பினத்தவர் என்று சிலர் விமர்சிப்பதை நான் கருத்தில்கொள்ளமாட்டேன். உலகில் உள்ள




கறுப்பின சமூகத்தினர் அவமதிக்கப்படும் போது, ஆபிரிக்க மக்கள் அவமதிக்கப்படும் போது நான் தாங்கிக் கொள்ளமாட்டேன். ஆப்பிரிக்க மக்கள் மீதும், மண்ணின் மீதும் ஒருபோதும் தடுப்பூசிகளை சோதனை செய்வதை அனுமதிக்கமாட்டேன். கொரோனா வைரஸைத் தோற்கடிக்க ஒற்றுமை மட்டுமே ஒரே வழி. இந்த உலகிற்கு இரு வழிகளை நான் பரிந்துரைக்கிறேன். முதலில் தேசிய ஒற்றுமை, இரண்டாவது உலகளாவிய ஒருமைப்பாடு. ஒரு நாட்டில் உள்ள அரசியல் கட்சித் தலைவர்கள் அனைவரும் வேற்றுமையை மறந்து நாட்டின் நலனுக்காக, மக்களுக்காக ஒன்று சேருங்கள். மக்களுக்காக அரசியல் செய்யாமல், அரசியல், கொள்கைகளைக் கடந்து பணியாற்றுங்கள்.

ஒற்றுமை மட்டும் இல்லவிட்டால், எந்த நாடும், எவ்வளவு சிறப்பான வசதிகள் இருந்தாலும் கொரோனாவை ஒழிக்க முடியாது, அது மேலும் சிரமத்தைக் கொடுக்கும். கொரோனா வைரஸை வைத்து அரசியல் ஆதாயம் அடையாதீர்கள், அரசியல் ஆதாயம் அடைவதற்கும், உங்களை நிரூபிப்பதற்கும் ஏராளமான வழிகள் இருக்கின்றன - என்றார். (ம)

---

# எண்ணெய் ஏற்றுமதிக்கான தடைகளை நீக்கவேண்டும்

## அமெரிக்காவிடம் ஈரான் கோரிக்கை

தெஹ்ரோன், ஏப். 10

எண்ணெய் ஏற்றுமதிக்கான தடையை அமெரிக்கா நீக்க வேண்டும். நாங்கள் அவர்களிடம் இருந்து பணத்தை எதிர்பார்க்கவில்லை என்று ஈரான் அதிபர் ரவுகானி தெரிவித்தார்.



இது தொடர்பில் ரவுகானி மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் அமெரிக்க அதிபர் ட்ரம்பை கேட்டுக்கொள்வது ஒன்றே ஒன்றுதான். எண்ணெய் மற்றும் பிற பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான தடைகளை நீக்க வேண்டும். நாங்கள் அமெரிக்காவிடமிருந்து நிதியை எதிர்பார்க்கவில்லை' என்றார். (ம)

---

# அனுமன் போன்று உதவியுள்ளீர்கள்!

## மோடியைப் பாராட்டிய போல்சோனாரோ

பிரேசிலியா, ஏப். 10

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் மலேரியா மாத்திரையான குளோரோகுயின் ஏற்றுமதி அனுமதிக்கு நன்றி தெரிவித்து, ராமாயணத்தையும், ஆஞ்சநேயரையும் சுட்டிக்காட்டி பிரதமர் மோடிக்கு பிரேசில் அதிபர் ஜேர் எம்.போல்சோனாரோ கடிதம் எழுதியுள்ளார்.



குளோரகுயின் மாத்திரைகளை அதிகளவில் உற்பத்திசெய்யும் நாடாக உள்ளது இந்தியா. உலக அளவில் சுமார் 70 வதவீதமான மாத்திரைகள் இந்த நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தில் மனிதநேய அடிப்படையில் உள்நாட்டுத்தடைகளைத்தளர்த்தி குளோரகுயின் மாத்திரைகளை ஏனைய நாடுகளுக்கு வழங்கி வருகின்றது இந்தியா. பிரேசிலுக்கும் இந்தியாவால் குளோரகுயின் மாத்திரைகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இந்த நிலையிலேயே மோடிக்கு பிரேசில் அதிபர் நன்றி தெரிவித்துள்ளார். (ம)

# மொகமட் ஹபீஸ், மலிக் ஓய்வுபெறல் வேண்டும்

## ரமீஸ் வலியுறுத்தல்

இஸ்லாமபாத், ஏப். 10

பாகிஸ்தான் அணியின் மூத்த வீரர்களான ஹபீஸ் மற்றும் மலிக் ஓய்வு பெற வேண்டும் என்று அந்த அணியின் முன்னாள் தலைவர் ரமீஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இருவரும் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து மரியாதையாகவும், மனதாரவும் வெளியேற வேண்டும். இருவரும் பாகிஸ்தான் அணிக்காக நீண்ட ஆண்டுகள் விளையாடியுள்ளனர் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. தற்போது அவர்கள் இருவரும் மனதார பாகிஸ்தான் அணியில் இருந்து ஓய்வு பெற வேண்டும். அவர்கள் இருவரும் தற்போது ஓய்வு பெற்றால் பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு உதவியாக இருக்கும் என நினைக்கிறேன் என்றார். (ம)



# 2கோடி ரூபாவுக்கு விற்பனையானது பட்லரின் ஜெர்சி

லண்டன், ஏப். 10

உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் பட்லர் அணிந்து விளையாடிய ஜெர்சி இலங்கை மதிப்பில் 2 கோடி ரூபாவுக்கு விற்பனையானது.

கொரோனா வைரஸுக்கு எதிரான நடவடிக்கைகளுக்காக இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்கள் நிதி திரட்டி வருகின்றனர். இந்த நிதி திரட்டலுக்காக பட்லர் உலகக்கிண்ண இறுதியாட்டத்தில் தான் அணிந்து விளையாடிய ஜெர்சியை ஏலத்தில் விட்டார். இந்த ஜெர்சி இலங்கை மதிப்பில் சுமார் 2 கோடி ரூபாவுக்கு விற்பனை ஆகியுள்ளது. (ம)




## இந்திய கிரிக்கெட் சபைக்கு

# ஐ.பி.எல் கைவிடப்பட்டால் 6,000 கோடி ரூபா இழப்பு

புதுடெல்லி, ஏப். 10

*கொரோனா வைரஸால் ஐ.பி.எல் தொடர் கைவிடப்பட்டால், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு சுமார் 6 ஆயிரம் கோடி ரூபா (இலங்கை மதிப்பில்) இழப்பு ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*



சர்வதேச கிரிக்கெட்டில் அதிக அளவில் வருமானம் ஈட்டும் வாரியமாக இந்திய கிரிக்கெட் வாரியம் திகழ்கிறது. 2008 ஆம் ஆண்டு ஐ.பி.எல் தொடரை அறிமுகப்படுத்தியது முதல் இந்தியக் கிரிக்கெட் ஈட்டும் வருமானம் பல மடங்காக அதிகரித்துள்ளது. இந்தத் தொடர் உலகளவில் ரசிகர்களிடையே மிகப்பெரிய அளவில் வரவேற்பு பெற்றது. விளம்பரம் மூலமும், தொலைக்காட்சி உரிமத்தின் மூலமும் பல மடங்கு பணத்தை அள்ளுகின்றது இந்தியக் கிரிக்கெட்.

கொரோனா வைரஸ் தற்போது தீவிரமா கப் பரவி வருவதால், நடப்பு வருட ஐ.பி.எல் தொடர் நடைபெறுமா என்பதில் பெரும் சந்தேகம் நிலவுகின்றது. தொடரை நடத்த வேண்டும் என்று ஒரு தரப்பினரும், பூட்டிய மைதானத்துக்குள் தொடரை நடத்த வேண்டும் என்று இன்னொரு தரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர். இந்த நிலையில் தொடர் கைவிடப்பட்டால் இந்தியக் கிரிக்கெட்டுக்கு எவ்வளவு தொகை வருமான இழப்பு ஏற்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதன்படி சுமார் 6 ஆயிரம் கோடி ரூபா இழப்பு ஏற்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# வித்தியாசமான அசைவுகள் ஏன்? மனம்திறந்தார் ஆஸி. வீரர் சிமித்



சிட்னி, ஏப். 10

துடுப்பெடுத்தாடும்போது வித்தியாசமான அசைவுகளை வெளிப்படுத்துவது ஏன்? என்று விளக்கம் வழங்கியுள்ளார் ஆஸ்திரேலிய வீரர் சிமித்.

சில வீரர்கள் மைதானத்தில் துடுப்பெடுத்தாடும்போதும், பந்துவீசும் போதும் சில வித்தியாசமான அசைவுகளை வெளிப்படுத்துவார்கள். பந்து வீச்சில் பும்ரா, ஜோன்சன், அக்தர் ஆகியோரை அத்தகையோருக்கு உதாரணமாகவும், துடுப்பாட்டத்தில் சந்தர்போல், சிமித், லாரா ஆகியோரை அத்தகையோருக்கு உதாரணமாகவும் குறிப்பிடலாம். இந்த நிலையில், தான் எதற்காக வெவ்வேறான அசைவுகளை வெளிப்படுத்துகின்றார் என்று விளக்கம் வழங்கியுள்ளார் சிமித்.

இது தொடர்பில் சிமித் மேலும் தெரிவித்ததாவது: 'யார் வீசுகிறார்கள், ஆடுகளம்; எப்படி செயற்படுகிறது என்பதைப் பொறுத்து நான் ஓட்டங்களைக் குவிப்பேன். அனைத்தையும் விட முக்கியமானது எதிராளி என்னை எப்படி வீழ்த்த வியூகம் அமைக்கிறார் என்பதைப் பொறுத்து சில விடயங்களைத் திட்டமிடுவேன். என்னைப் பொறுத்தவரை பந்து இலக்கைத் தாக்காது எனும்போது ஆட்டமிழப்பது வீண். எனவே நான் ஆட்டமிழக்கும் விதங்களைக் குறைப்பதற்காக நான் செய்யும் அணுகுமுறைதான் இது - என்றார். (ம)

# இந்திய அணியினது பண்பாட்டை தோலுரித்த முன்னாள் வீரர் யுவி

புதுடெல்லி, ஏப். 10

இந்திய அணியின் தற்போதைய பண்பாடு குறித்து கடும் விமர்சனங்களை முன்வைத்தார் அந்த அணியின் முன்னாள் வீரர் யுவராஜ் சிங்.

சமூக வலைத்தளத்தில் ரோகித்துடன் இடம்பெற்ற உரையாடல் ஒன்றில் யுவராஜ் மேலும் தெரிவித்ததாவது:

'நான் அணிக்குள் வந்தபோது, அல்லது நீ (ரோகித்) அணிக்குள் வந்தபோது நம் மூத்த வீரர்கள் ஒழுக்கமாக கட்டுக்கோப்புடன் நடந்து கோண்டனர். சமூக ஊடகம் இல்லை, கவனச் சிதறல்க ளும் இல்லை. அதாவது மூத்த வீரர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள், ஊடகங்களிடம் எப்படி பேசுகிறார்கள் போன்ற விடயங்களைக் கற்றுக் கொள்ளலாம். அவர்கள் இந்தியாவில் கிரிக்கெட்டின் தூதர்கள் ஆவார்கள். ஆனால் இப்போது அப்படியில்லை. இதைத்தான் உங்களுக்கு நான் கூறவிரும்புகிறேன். இந்தியாவுக்காக விளையாடிய பிறகே நீங்கள் உங்கள் ஆளுமை குறித்து அக்கறையுடன் கவனமாக இருக்க வேண்டும். ஆனால் இப்போது அணியில் நீ, விராட் கோலி தான் மூத்த வீரர்கள். மூத்த வீரர்களுக்கு மரியாதை என்ற விதத்தில் ஒரு சிலர் தான் உள்ளனர். மூத்த வீரர்கள், இளம் வீரர்களுக்கு இடையே ஒரு சிறிய கோடுதான் உள்ளது. யார் வேண்டுமானாலும் யாரிடமும் எதை வேண்டுமானாலும் கூறலாம் என்ற நிலை இப்போதைய இந்திய அணியில் உள்ளது - என்றார். (ம)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.04.2020 இல் வெளியிடப்பெற்றது.